பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 18 சனிக்கிழமை (31.05.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 186

# இலங்கைக்கு எதிராகத் தடை விதித்து இனப்பிரச்சினையை சிக்கலாக்காதீர்கள்!

## மேற்குலகத்திடம் ஜீ.எல்.பீரிஸ் கெஞ்சல்

கொழும்பு, மே 31

**மனித உரிமை மீறல்களுக்காக இலங்கைக்கு எதிராகப் புதிய தடைகளை விதிப்பதன் மூலம் இனப்பிரச்சினையை மேலும் மோசமடையச் செய்யவேண்டாம். இலங்கையின் சர்வ தேச வர்த்தக விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரீஸ் அமெரிக்காவில் வைத்து மேற் குலக நாடுகளை இவ்வாறு கெஞ்சிக் கேட்டுள்ளார்.**

அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு களை மேற்கொள்வதற்கும் கிழக்கு மாகா ணத்தில் முதலீடு செய்யுமாறு அமெரிக்க முதலீட்டாளர்களை வலியுறுத்துவதற்கு மாக அமெரிக்காவிற்கு விஜயம் மேற் கொண்டுள்ள அமைச்சர் ஜி.எல்.பீரீஸ், வாஷிங்டனில் ஏ.எவ்.பி.செய்தி ஸ்தாப னத்திற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்ட விடயத்தைக் குறிப்பிட்டுள் ளார்.

பயங்கரவாதத்துடன் போராடிக்கொண் டுள்ள -அபிவிருத்தியடைந்து வரும் -ஒரு நாட்டின் பிரச்சினைகளைப் புரிந்துகொள் வதும், அது குறித்து அனுதாபம் கொள்வ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி, கல்முனையில் விமானக் குண்டுவீச்சு

கொழும்பு, மே 31

பூநகரி, கல்முனைப் பகுதியில் நேற்று நண்பகல் 12 மணி மற்றும் பிற்பகல் 1 மணி ஆகிய நேரங்களில் விமானப் படையின ரின் கிபீர் விமானம் குண்டு வீச்சை நடத் தியிருக்கிறது.

அந்தப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் ஆட்லறி மற்றும் மோட்டார் எறிகணைத் தளங்கள் மீதே தாங்கள் தாக் குதல் நடத்தியிருப்பதாக விமானப்படை யினர் தெரிவித்திருக்கின்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வுக்கு முயற்சிக்குமாறு அமெரிக்கா மீண்டும் வலியுறுத்து!

கொழும்பு, மே 31

இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் தீவிரமடையும் உள்நாட்டு யுத்தம் குறித்து அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமேயில்லை என்பதை மீண் டும் வலியுறுத்திக் கூறியுள்ள அமெரிக்கா, அரசியல் தீர்வுக்கான அவசியத்தையும் திரும் பவும் வலியுறுத்தியிருக்கின்றது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் சார்பில் தென்னாசிய மற்றும் மத்திய ஆசிய விவரகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதி உதவி அமைச்சர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிவிலியன்கள் இலக்கு வைக்கப்படுவதை கண்டிக்கின்றார் ஐ.நா. பிரதிச் செயலர்

### சூத்திரதாரிகளை நீதியின் முன் நிறுத்தவும் கோருகிறார்

நியூயோர்க், மே 31

இலங்கையில் தொடரும் மோதல்களில் பொதுமக்கள் இலக்குவைக்கப்படுவதை ஐக் கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்கள் மற்றும் அவசர நிவாரண ஒருங்கிணைப் பிற்கான பிரதிச் செயலாளர் நாயகம் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

மோதலில் ஈடுபடாதவர்களை இலக்கு வைப்பது சர்வதேச மனிதாபிமான சட்டத் திற்கு முரணானது என நியூயோர்க்கில் கருத்துத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வில்பத்தில் நேற்று மூவர் சுட்டுக்கொலை!

கொழும்பு, மே 31

அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள வில்பத்து வனவிலங்கு சரணாலயப் பகுதி யில் நேற்று இரவு ஊர்காவல் படைத்தரப் பைச் சேர்ந்த ஒருவர் உட்பட மூவர் சுட் டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

வில்பத்து வனவிலங்கு சரணாலயப் பகு தியில் உள்ள 18ஆவது வலயப் பகுதியி லேயே இரவு 8.30 மணியளவில் இவர்கள் மூவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் தேனுடையான் பகுதியில் நேற்று 13 மணி நேரம் கடும் சண்டை

### முன்நகர்வை முறியடித்ததாகப் புலிகள் அறிவிப்பு

வவுனியா, மே 31

மன்னார் தேனுடையான் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட முன்ந கர்வு படை நடவடிக்கையை தாம் முறிய டித்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறி வித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 5 மணிக்கு ஆரம்ப மான சண்டை சிறிதுநேர இடைவெளியு டன் மாலை 6 மணிவரை நடைபெற்றதாகவும்- மோதலில் 25க்கும் அதிகமான படையி னர் கொலையுண்டதாகவும் 45க்கும் அதி கமானோர் காயமுற்றதாகவும்- விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர்.

மன்னாரின் மேற்குப் பகுதியில் உள்ள மாளிகைத்திடல் பகுதியிலிருந்து தேனுடை யான் நோக்கி நேற்று அதிகாலை 5.30 மணியளவில் சிறிலங்காப் படையினர் மிகச்செறிவான எறிகணைச் சூட்டாதர வுடன் பெருமெடுப்பிலான முன்நகர்வு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

நண்பகல் வரை நடைபெற்ற படையி னரின் பெரும் முன்நகர்வுக்கு எதிராக விடு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக உரிமைக்காக நேற்று ஆர்ப்பாட்டம்!

### கோட்டை ரயில் நிலையம் முன்பாக

கொழும்பு, மே 31

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் சனத் பாலசூரிய மற்றும் அதன் செயலாளர் பொத்தல ஜெயந்த ஆகியோர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் மிரட்டப்பட்டனர் எனக் கூறப்படுவது தொடர்பாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் கடத்தப்பட்ட இருவர் கண்கள் கட்டப்பட்ட நிலையில் விடுவிப்பு

கொழும்பு, மே 31

வெள்ளவத்தை மற்றும் மோதரைப் பகுதிகளில் வைத்து வெள்ளை வான்களில் கடத்தப்பட்ட இரண்டு இளம் குடும்பஸ்தர்களும் கடுமையாகத் தாக்கப்பட்டு கண்கள் கட்டப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்டனர் என அவர்களது குடும்பத்தினர் வாழ்க்கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பப்பயிற்சிப்பிரதியமைச்சருமான பெ.இராதாகிருஷ் ணனிடம் தெரிவித்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல்வீச்சில் உயிரிழந்தோரின் மரணச்சடங்குக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம்,மே31

கடந்த புதன்கிழமை இரவு ஷெல் வீச்சுக்கு ஆளாகி, குருநகர், கொழும்புத்துறைப் பகுதிகளில் உயிரிழந்தவர் களின் குடும் பங்களுக்கு இறுதிச் சடங்குகளைச் செய்வ தற்கென உதவித் தொகை வழங்கப்பட்டது.

குறிப்பிட்ட சம்பவத்தில் உயிரிழந்த இரு குடும்பங் களைச் சேர்ந்த ஆறுபேருக் கும் இறுதி சடங்குகளுக்கான செலவாக தலா 10 ஆயிரம் ரூபா நேற்று வழங்கப்பட்டது.

யாழ்.செயலக புனர்வாழ்வுப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தெஹிவளைப் பகுதியில் எட்டு இளைஞர்கள் கைது!

கொழும்பு, மே 31

கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட் டிருந்த ஏழு மலையக இளைஞர்களும், கணனி படிப்பில் ஈடுபட்டிருந்த யாழ். மாணவன் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் தெஹிவளை பொலிஸாரினால் கைதுசெய் யப்பட்டுள்ளனர் என அவர்களது உறவினர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை சமூகம் மீதான கொடுமைகள் ஐ.நா.மனித உரிமை கவுன்ஸிலின் கவனத்திற்கு!

கொழும்பு, மே 31

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கடத் தப்படுவது, படுகொலை செய்யப்படு வது, சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப் படுவது ஆகியன குறித்துக் கவலை வெளி யிட்டுள்ள ஐக்கிய நாடுகளின் கல்வி உரிமைகளுக்கான விசேட அறிக்கையா ளர் வேர்ணொர் முனொஸ், இவ்விடயங்களை இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டு வரும் வகையில் அரசுக்குத் தாம் எழுதிய கடிதத்திற்கு அரசு பதிலளிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூன் 2ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ள மனித உரிமை கவுன்ஸிலின் அடுத்த கூட்டத் தொடரில் சமர்ப்பிப்பதற் காக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையி லேயே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள் ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:-

2006ஆம் ஆண்டு ஒகஸ்டில் இருந்து

(11ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர்
இ.ஓங்காரமூர்த்தி அவர்களின் அன்புத் தாய்

**திருமதி [illegible]**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**யாழ்.மத்திய கல்லூரி.** (74997) *கல்விசாரா ஊழியர்கள்*

## கண்ணீர் அஞ்சலி

### து.வைத்திலிங்கம்

(ஓய்வுபெற்ற
மேலதிக அரசாங்க அதிபர்)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் பழைய மாணவர் சங்கத் தலைவரும் இலக்கியப் படைப்பாளருமாகிய து.வைத்திலிங்கம் அவர்கள் 27.05.2008 காலமாகிய செய்தியறிந்து ஆறாத்துயரடைகின்றோம். எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையக்குகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக சிவஞான வைரவரின் பாதம் பணிந்து நிற்கின்றறோம். (ß/553062)

**பழைய மாணவர் சங்கம்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

29.05.2008 அன்று எமது கல்லூரி மாணவர்களான றொபேட் பெரிசன் நிரோஜன் அவரது சகோதரன் றொபேட் பெரிசன் றொசான் ஆகியோரும் அவர்களின் பெற்றோரும் அகால மரணமடைந்த செய்தியைக்கேட்டு கல்லூரிச் சமூகம் கலங்கி நிற்கின்றது.

'கூடியிருந்த குயில்கள் இரண்டு
பாடசாலை விட்டு மாலை துயில்
கொண்டவேளை கொடியவனின்
எறிகணை உயிர்தனைக் குடித்ததோ.'

உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம். (74954)

**அதிபர், ஆசிரியர்கள் , மாணவர்கள்**
**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**


10 hrs இல் Internet & E-Mail ஆரம்பம் 01.06.08 காலை: 11.00 1 hrs 100/=
hrs இல் தமிழில் விளக்கக் குறிப்புகளுடன் 1 hrs 300/= மட்டுமே!
வீடியோ மிக்சிங் ஆரம்பம் 01.06.08 மாலை 4.00
Premiere 6.5/7.0, Studio 10, Cool 3D Studio,
3D AlbumCS, Crystal 3D, Holly Wood Effects
Online Classess
மேலதிக விபரங்களுக்கு :
College of Computer
கணனியியல் கல்லூரி
கே.கே.எஸ் வீதி இணுவில் 0777111009


## நெஞ்சகலா நினைவலைகள்

9 ஆம் ஆண்டு 31 ஆம் நாள் நினைவஞ்சலி





| அமரர் அரியகுட்டி பொன்னுத்துரை | | திருமதி சரஸ்வதி பொன்னுத்துரை |
|---|---|---|
| 05.06.1912 ⇦ | தோற்றம் | ⇨ 02.03.1927 |
| 10.06.1999 ⇦ | மறைவு | ⇨ 01.05.2008 |

திதி: ஏகாதசி 31.05.2008

*அன்னை, பிதா, மூத்தோர், ஆசிரியர், தெய்வம்*
*என்று நீதி சொல்லும் எங்கள் அப்பா - தெய்வம்!*
*பத்து மாதம் எமைச் சுமந்து பெற்றெடுத்த அம்மா*
*சொத்தாய் எமை ஏற்றும், காக்கும் எங்கள் அம்மா-*
*தெய்வம்.*

*ஊரெழு மேற்கு,*
*சுன்னாகம்.* (74951) குடும்பத்தினர்.

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, மே31

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* காலை 8.30 மணி - ஜொலிஸ்ரார் வி.க எதிர் யாழ்ப்பாணம் பற்றீசியன் வி.க.
* அரியாலை மத்தி வி.க. எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.க. (1-86)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே31

சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பகல் பராமரியுப் நிலையத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணியளவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஓய்வுபெற்ற கிராமசேவையாளர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கர் கலந்து கொள்வார். (203)

★ ★ ★

வலி.வடக்கு, மே31

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு இடையேயான ஆண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டிகள் இன்று புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை 8 மணி முதல் இடம்பெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச செயலகங்களும் 04 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளினதும் விளையாட்டு அணிகள் இப் போட்டியில் விலகல் முறையில் மோதவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கு பொறுப்பாக விளையாட்டு அலுவலகர்களான இ.அனுரகாந்தனும், செ.சதீஸ்குமாரும் உள்ளார்கள். (1-86)

★ ★ ★

வலி.வடக்கு, மே31

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்திய 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப 3 மணிக்கு நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

மோதும் அணிகளின் விவரம் வருமாறு:-

* 3ம் இடத்திற்கான போட்டி - யாழ்ப்பாணம் பாடுமீன் வி.க அணி எதிர் மானிப்பாய் றெட்றேஞ்சர் வி.க அணி.
* இறுதிப்போட்டி - யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அணி எதிர் ஊரெழு றோயல் வி.க அணி.

(1-86)


SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
கணக்கீடு
A/L 2010
கணக்கீட்டுச் சமன்பாடு
ஆரம்பம்:-
31.05.2008 of 10 am
Mr.S.தவா, B.Com(Hons)
(Acc.Spl.)
O/L DAY
SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L தமிழ்
2010-திருக்குறள் (வினா-விடை)
ஞாயிறு 1.00-2.00
2009-சிறுகதைத் தொகுப்பு
(வினா-விடை) ஞாயிறு 2.00-3.00
Mr.S.சிவா B.A (Hons)
★ ஆங்கிலம்: Mr.T.கஜன்
★ Mr.S. கார்த்திக்
★ Mr.A. RAJAH
★ CHRIS. LOG. Drama+Eng.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தப்பு சின்னம்மா (நெல்லியடி பூமா)



சாமியன் அரசடி, கரவெட்டி மத்தியைச் சேர்ந்த திருமதி கந்தப்பு சின்னம்மா (பூமா) 27.05.2008 செவ்வாய்க்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2008) ஞாயிற்று க்கிழமை காலை 9மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10மணியளவில் சோனப்பு மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாமியன் அரசடி,*
*கரவெட்டி மத்தி.* (A) தகவல்: குடும்பத்தினர்.

### வேலுப்பிள்ளை பொன்னையா



தம்பகாமம், பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் பாண்டியன் தாழ்வு, சுண்டுக் குளியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னையா 29.05.2008 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்துரை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், நாகேஸ்வரி, யோகேஸ்வரி, இராஜேஸ்வரி (நோர்வே), வெற்றிவேல் ஆகியோரின் அன்புத் தந்தையும், மன்மதராஜா, சிவகுமார், செல்வநேசன் (நோர்வே), வாசுகி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கஜேந்திரன் (மாணவன், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), நகுலா (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி), சிவஜெனா, குகதாஸ் (பிரான்ஸ்), ஜீவதாஸ், தனுஷன் (நோர்வே), விதுஷன் (நோர்வே), கௌசிகன் (நோர்வே), நிஷோதன் (மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி), விஷ்ணுயன் (மாணவன், யாழ்.போஸ்கோ வித்தியாலயம்), விதுஷிகன், மதுஷ்ஜா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இலட்சுமிப்பிள்ளை, இராசையா, சிவக்கொழுந்து ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற பார்வதி மற்றும் செல்லாச்சி, இராஜரட்ணம் (ஆஸ்திரேலியா), கந்தசாமி, அரியராசா ஆகியோ ரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று மு.ப.10 மணியளவில் பூதவுடல் துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*54/2 A, சந்தனமாதா முன் ஒழுங்கை,*
*பாண்டியன் தாழ்வு,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.* தகவல்: பொ.வெற்றிவேல் (மகன்). (74953)

### திருமதி சிவரத்தினம் இராசம்மா

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவரத்தினம் இராசம்மா நேற்று (30.05.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முத்துக்குமாரு - தங்கம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற செல்லையா - மாணிக்கம் தம்பதியரின் மருமகளும், முருகவேல் (கிராம அலுவலர், இடைக்காடு), சிவஈஸ்வரி (ஆசிரியர், அச்சுவேலி மத்திய கல்லூரி), சன்னதிவேல் (அஞ்சலகம், அச்சுவேலி), சிவலோஜினி (காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), சுந்தரவேல் (அஞ்சலகம், சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவேஸ்வரி, தங்கராசா (கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபை), சிவயோகராணி (ஆசிரியர், தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்), புனிதநாதன் (அஞ்சலகம், மீசாலை), தாரிணி (அஞ்சலகம், புத்தூர்) ஆகியோரின் அன்பு மாமியும், கீதாஞ்ஜினி, வைசாஷி, அபியூா, கிருஷாலி, மதுஷன், அபிராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.05.2008) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் தகனக் கிரியைக்காக இடைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நிலவு கலட்டி,*
*இடைக்காடு, அச்சுவேலி.* (74957) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி குணரட்ணம் அன்னலட்சுமி

(குணமாமி)

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைச் சேர்ந்த திருமதி குணரட்ணம் அன்னலட்சுமி அவர்கள் 27.05.2008 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு நாளை (01.06.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு: முன்னர் கிடைத்த தகவல் 6 ஆம் பக்கத்தில்

தகவல் :
கு.பாலசுப்பிரமணியம்
(பிள்ளையார் ரான்ஸ்போட், சங்கானை). (ß/553057)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டத்துறையில் சிறந்த வீரர்களை உருவாக்க ஜப்பானில் நடைபெறுவதைப் போன்ற தொடர் பயிற்சிகள் யாழ்ப்பாணத்திலும் உரிய முறையில் வழங்கப்படவேண்டும்

யாழ்.மாவட்டத்தில் உதைபந்தாட்டத் துறையில் சிறந்த வீரர்கள் உருவாக வேண்டுமானால் குறிப்பிட்ட விளையாட்டில் மட்டும் வீரர் ஒருவர் முழுமையான கவனம் செலுத்த வேண்டும். ஆனால் யாழ்ப்பணத்தைப் பொறுத்தவரையில் ஒரு வீரர் பல விளையாட்டுகளில் ஈடுபடுவதினால் குறிப்பிட்ட ஒரு விளையாட்டில் அந்த வீரரால் முழுமையாகப் பிரகாசிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. எனவே இதில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியரும் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் இளையோருக்கான யாழ். மாவட்ட இணைப்பாளருமான மரியதாஸ் பேர்ட்டி பனிஸ்ரர் தெரிவித்தார்.

இவர் கடந்த மாதம் ஜப்பானில் இடம்பெற்ற சர்வதேச உதைபந்தாட்டம் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி முகாமில் கலந்துகொண்டு திரும்பியுள்ளார். இலங்கையில் இருந்து இப்பயிற்சி நெறிக்கு இருவர் பங்குபற்றினார்கள். ஹற்றனில் இருந்து ஹெக்டர்பில்லாவும் யாழ்ப்பாணத்தில் இருந்து பேர்ட்டி பனிஸ்ரருமே அந்த இருவருமாவர்.

இவர்களுக்கான பயிற்சிகள் ஜப்பான் நாட்டில் உள்ள 'ஜே விளைச்சா' என்னும் இடத்தில் உள்ள உதைபந்தாட்ட பயிற்சிக் கல்லூரியில் ஒருவார காலம் இடம்பெற்றன.

இந்தப் பயிற்சி தொடர்பாக பேர்ட்டி உதயனுக்கு வழங்கிய செவ்வி வருமாறு:-

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

ஜப்பான் நாட்டில் உதைபந்தாட்டப் பயிற்சிகள் என்பது நீண்டகால செயற்திட்டத் தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறு வயதிலேயே விளையாட்டு வீரர்கள் இனம் காணப்பட்டு பயிற்சி நிலையங்களில் இணைத்துக்கொள்ளப்படுகின்றார்கள். இவ்வாறு இணைக்கப்படுபவர்கள் கல்வியுடன் தொடர்ந்தும் உதைபந்தாட்டத்திலேயே பயிற்சிகளை பெற்றுக்கொள்ளமுடியும். வேறு விளையாட்டுகளில் விளையாடச் செல்லமாட்டார்கள். விளையாடவும் அனுமதிக்கப்படுவதில்லை.

12 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்குத் தொடர் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. விளையாட்டு மைதானங்களைப் பொறுத்தவரையில் மிகவும் மென்மையான மைதானங்களாகவே காணப்படுகின்றன. பல விளையாட்டு மைதானங்கள் அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளன. உள்ளக விளையாட்டு மைதானங்களும் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் உள்ள உதைபந்தாட்ட மைதானங்கள் மிகவும் கடுமையானதாகக் காணப்படுகின்றது. ஜப்பான் நாட்டில் உள்ள மைதானங்கள் இயற்கையாக காணப்படுவதுடன் செயற்கையாக அமைக்கப்பட்ட மைதானங்களும் காணப்படுகின்றன.

மழை பெய்யும் காலங்களில்கூட பயிற்சியினை மேற்கொள்வதற்கு உள்ளக மைதானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மைதானங்கள் மென்மையாகக் காணப்படுவதனால் விளையாட்டு வீரர்கள் மத்தியில் தமது

## ஜப்பானில் ஒரு வாரகாலப் பயிற்சி பெற்று திரும்பிய பயிற்றுவிப்பாளர் பேர்ட்டி செவ்வி

உடல் பாதுகாப்பு தொடர்பாக நம்பிக்கை காணப்படுவதுடன் வேகமாக விளையாடக் கூடியதாக உள்ளது.

உதைபந்தாட்டப் பயிற்சிக் கல்லூரிகளிலேயே மாணவர்களுக்கான கல்வியும் புகட்டப்பட்டு வருகின்றது. இந்தப் பயிற்சி மூலம் மாணவர்கள் விசேடமான கல்வி நடைமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்றே குறிப்பிடலாம். பாடசாலையில் இவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

உயர்கல்வி பெற வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இவர்கள் உயர் கல்வி பெற்றாலும் தமது பயிற்சி பெற்ற விளையாட்டையும் தொடர்ந்து பேணி வருகின்றார்கள்.

### அதிக வீரரை உருவாக்குவது

குடாநாட்டுப் பாடசாலைகளும் இத்தகைய ஒரு நடைமுறையை பின்பற்றுவார்களானால், சிறுவயதினிலேயே சிறந்த வீரர்களை உருவாக்கிக்கொள்ள முடியும்.

இங்கு குறிப்பிட்ட சிலரே அனைத்து விளையாட்டுகளையும் விளையாடும் நிலைமை தொடருகின்றது. இந்த நிலையில் மாற்றங்களை ஏற்படுத்துகையில் யாழ்ப்பாணத்தில் அதிகளவு வீரர்களை உருவாக்குவதுடன் தரமானவர்களை தேசிய மட்டம் வரை இனங்காட்டவும் வெற்றிகளைப் பெறவும் வழியேற்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஜப்பானில் இடம்பெறும் தொடர் பயிற்சி முகாம்கள் வீரர்களை உடல், உள ரீதியாக வளப்படுத்துடன் ஒழுக்கம், கட்டுப்பாட்டை பேணவும் வழியேற்படுத்துகின்றது.

மைதானங்கள் பெரியவையாக இருந்தாலும் பயிற்சிகள் சிறிதளவு மைதானத்திற்குள் வைத்தே வழங்கப்படுகின்றன.



இந்தப் பயிற்சிகள் விரைவாக விளையாட்டை ஊக்குவிப்பதுடன் திறனையும் பயன்படுத்திக்கொள்ளவும் தூண்டுகின்றது. குறுகிய நேரத்தில் பந்தைப் பெற்று அடுத்த நிலைக்கு உடனடி யாகக் கொண்டு சென்று விடும் ஆற்றல் இந்த சிறிய மைதானப் பயிற்சி மூலம் பெற்றுக்கொள்கின்றமை விளையாட்டு வீரர்களுக்கு சாதகமாக அமைகின்றன.

எங்களுக்கும் இத்தகைய பயிற்சிகள் வழங்கப்பட்டன. பெற்ற பயிற்சிகள் உரிய முறையில் குடாநாட்டு வீரர்களுக்கும் கிடைக்கப் பெறவேண்டும். அந்தவகையில் முதன்முறையாக புத்தூரில் கலைமதி சனசமூக நிலையத்தில் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் கருணாகரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பயிற்சிமுகாம் ஒன்றில் பயிற்சிகளை வழங்கியுள்ளேன்.

எதிர்காலத்தில் பயிற்சிகளைப் பெற விரும்பும் பாடசாலைகள், கழகங்கள் தொடர்பு கொண்டால் அங்கு சென்று பயிற்சிகளை வழங்கவும் தயாராக உள்ளேன்.

### ஒரே மைதானத்தில் பல விளையாட்டுக்கள்

யாழ்ப்பாணத்தில் உள்ள மைதானங்கள் பொதுவாக உதைபந்தாட்டப் போட்டிகளுக்கென்று ஒதுக்கப்பட்டு இருக்கவில்லை. ஒரு மைதானமே அனைத்து விளையாட்டுகளுக்கும் பயன்படுத்தப்படும் நிலை காணப்படுகின்றது. இதன்காரணமாக மைதானம் கடுமையாக்கப்படும் சிறப்புத் தன்மையை இழந்தும் காணப்படுகின்றது.

இங்கு தனியான மைதானம் ஒன்றாவது உருவாக்கப்பட்டால் வீரர்கள் சிறந்த பெறுபேற்றினை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆனால் இத்தகைய மைதானங்களை உருவாக்குவது என்பது பெரும் சிரமம் ஆகும்.

உரிய நிலம் இல்லாமை இத்தகைய சிறப்பு மைதானங்களை உருவாக்கமுடியாமைக்கு பெரும் தடையாக இருக்கின்றது.

சிறுவர்களும் விளையாட்டு வீரர்களும் பந்துடன் விளையாடவேண்டுமே தவிர பயத்துடன் விளையாடக்கூடாது.

விளையாட்டின்போது திட்டமிட்ட முறையில் வீரர்களை எதிரணி வீரர்கள் தாக்கும் நிலைமையும் இந்தப் பயம் ஏற்படக் காரணமாகும். போட்டியின்போது ஓர் அணி தோல்வி அடையும் நிலை ஏற்படும்போது அணி சார்ந்தவர்கள் எதிரணியை தாக்கும்படி கூச்சலிடும் கலாசாரம் இங்கு காணப்படுகின்றது. இதேபோன்று வீரர்கள் தாக்கப்பட்டும் இருக்கின்றார்கள். இத்தகைய கட்டுப்பாடற்ற நிலைமை அங்கு அனுமதிக்கப்படுவதில்லை. ரசிகர்களும் ஆதரவாளர்களும் விளையாட்டை ரசிப்பார்களே அன்றி இத்தகைய அசிங்கங்களை ரசிப்பதும் இல்லை ஏற்றுக்கொள்வதும் இல்லை.

விளையாட்டு வீரர்களின் உடல் நலத்தில் கூடிய கவனமும் அக்கறையும் காட்டப்படுகின்றது. மைதானத்தில் பயிற்சி பெறும்போதும் போட்டிகளில் ஈடுபடும்போதும் சிறிய காயங்களுக்கு உள்ளாகினால்கூட உடனடியாக முதல் உதவிச் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இது விளையாட்டு வீரர்கள் நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் விளையாட வழி வகுக்கின்றது. முதலுதவிப் பெட்டிகள் மைதானங்களில் காணப்படுவதுடன் விளையாட்டு அணிகளும் முதலுதவிப் பெட்டிகளைக் கொண்டே மைதானத்திற்கு வருகின்றனர்.

இத்தகைய நிலைமையை யாழ்ப்பாணத்திலும் பாடசாலைகளும் கழகங்களும் போட்டிகளை நடத்துபவர்களும் ஏற்படுத்தவேண்டும். இது விளையாட்டின் தரத்தை உயர்த்த வழிசெய்யும்.

யாழ்.மாவட்டத்தில் திறமையான வீரர்கள் பலர் பரவலாகக் காணப்படுகின்றார்கள். இவர்கள் உரிய பயிற்சிகளுக்கு உள்வாங்கப் படாத நிலைமையே காணப்படுகின்றது. இவர்கள் உரிய பயிற்சிகளைப் பெறக்கூடிய வகையில் ஒன்றிணைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படவேண்டியது அவசியமாகும்.

இதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டியது உதைபந்தாட்டத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் உரியதாகும். குடாநாட்டின் பல பகுதிகளிலும் வீரர்கள் காணப்படுவதனால் அவர்களை ஓர் இடத்தில் பயிற்சிக்காக மையப்படுத்துவதில் ஒருங்கிணைப்பதிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இவர்களுக்குப் போக்குவரத்தில் சிரமங்கள் காணப்படுகின்றன. பொருளாதார நெருக்கடிகள் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து வீரர்களை மீட்டெடுப்பதற்கு தொழிலதிபர்கள், நிறுவனங்கள் உதவி செய்யவேண்டும் என்றார்.

**செவ்வி: நேசன்**

# சமூகத்தில் வன்முறைகள் அதிகரிப்பதற்கு புகைத்தல் மறைமுகக் காரணியாகின்றது

இன்று மே 31ஆம் திகதி உலக புகைத்தலுக்கு எதிரான நாள். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

புகைபிடிக்கும் பழக்கம் எமது சமூகத்தில் மேலைத்தேய ஆட்சியின் தாக்கத்தாலேயே ஏற்பட்டது. இதனால் இத்தீய பழக்கத்தைத் தவிர்ப்பதற்கான அறவழிகள் எமது பழைய இலக்கியத்தில் இல்லை. புகைத்தலை விலக்குவதால் துன்பம் இல்லாத வாழ்க்கை அமையும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும். *"பகை புகை மிகை நகை"* என்பது இதனை எளிதில் மனதில் பதிக்க உதவும்.

புகைப்பிடிப்பவரின் வாய் வெப்பத்தினால் கருகி, செவ்விதழ் கருமையாகிக் காணப்படும். அவர்களது செயல்களும் கருமையாகி இருக்கும். நடத்தை மாற்றங்கள் காணப்படும். இது ஒரு ஆபத்தான சக்கரமாகப் புகைப்பிடித்தலுடன், மதுபானம் பாவித்தல், சமூக விரோத செயல்கள், போதைப்பொருள் பாவனை என்பன இணைந்து காணப்படும். அல்லது அவற்றுக்கு ஆளாகும் சூழ்நிலை காணப்படும். சிறைக்கைதிகளது சமூகவிரோத செயல்களில் ஈடுபடுவோரிலும் புகைப்பிடிக்கும் பழக்கம் காணப்படும். சமூகத்தில் வன்முறை அதிகரிப்பதற்கு புகைத்தல் பாவனையும் மறைமுகமான காரணமாக உள்ளது. அதாவது போதைப் பொருள் பாவனைக்கு அடிப்படையாக புகைத்தல் பழக்கம் உள்ளது. *"தீயிலும் தீயவர் தீயினை வாய்தனில் நயப்பவர்"* என்பது இதனை விளக்கும்.

எமது சுவாசச் சிற்றறைகள் எபது சதுர மீற்றர் பரப்பளவு கொண்டது. இது உடலுக்கு உயிர் வாழ அத்தியாவசியமான ஒட்சிசனை குருதிக் கலன்களுக்கு கொடுத்து காபனீரொட்சைட்டை அகற்றுகின்றது. இதனை நெருப்பினால் சிதைக்கும் நபர்கள் தம் சிதைகளை தாமே கொள்ளி வைக்கும் நிலையில் உள்ளவர்களே. இதனை பலர் விரும்பிச்செய்கின்றனர். மேலும் விலை கொடுத்துச் செய்கின்றனர். இதனால் ஏற்படும் பொருளாதார நட்டத்திற்கு மேலாக நோய்வாய்ப்படலும் ஏற்படுகின்றது.

புகைப்பிடிப்பவர்களில் அரைவாசிப் பேர் அதனாலேயே இறக்கின்றனர். சுவாசப் புற்றுநோய், சுவாசப்பாதைப் புற்றுநோய், சுவாசப்பை அழற்சி, இதயபலவீனம், மாரடைப்பு, பாரிசவாதம், கால்களுக்கு செல்லும் இரத்தோட்டம் தடைப்படல், வாய்ப்புற்றுநோய், கலப்புற்ற நோய், இரப்பைப் புண், சிறுநீர்ப்பை புற்றுநோய் எனப் பல நோய் நிலைகள் புகைப்பிடிப்பவர்களுக்கும், புகைப்பிடிப்பவர்களுக்கு அருகில் நின்று சுவாசிப்பவர்களுக்கும் ஏற்படுகிறது. மேலும், என்பு முறிவு வயது வந்தவரினுள் பழைய எரிந்த புகைத்தல் அடிக்கட்டைகளையும், மற்றதை வெறுமையாகவும் வைக்கவேண்டும். புகைக்கும் எண்ணம் வரும்போது பழைய அடிக்கட்டைகளைப் பார்க்கும்போது வெறுப்பு ஏற்படும். ஒவ்வொரு தடவையும் புகைக்கும் எண்ணம் வரும்போது பழைய அடிக்கட்டைகளைப் பார்த்த பின் ஒவ்வொரு தடவையும் புகைக்கும்போது செலவாகும் பணத்தை முதலில் ஒவ்வொருநாளும், பின் கிழமைகளிலும், பின் மாதங்களிலும் கணக்கிடவேண்டும். இது புகைத்தலை விலத்தலைத் தூண்டும்.

சிலர் புகைப்பிடித்தல் பதகளிப்பு குறையும் என்பர். இது தவறானதும் எதிர்மாறானதுமாகும். புகைப்பிடித்தால் பதகளிப்பு அதிகவிளையாட்டு வீரர்களையோ, கடற்படை வீரரையோ, நடிகர்களையோ மையப்படுத்தி புகைத்தல் தொடர்பான விளம்பரங்கள் எடுக்கப்படுகின்றன. இதனைப் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும், சிரமம் தவறாது காட்சிப்படுத்துகின்றன. இதனைப் பார்க்கும் சாதாரண மனிதன் புகையை வாயில் வைத்தால் தானும் அந்த நடிகர் அல்லது விளையாட்டு வீரன் என்ற நிலையில் சந்தோஷப்படலாம். ஆனால் புகைத்துக் காசநோயாளி யாகியவனையோ, புகைத்தலினால் புற்றுநோய் ஏற்பட்டு அவதிப்படுபவனையோ, புகைத்தலுடன் காட்சிப்படுத்தினால் மறுகணமே புகைத் தல் பற்றிய மிகை எழுச்சி நிலை நின்றுவிடும்.

மேலும் சிலர் புகைப்பிடித்தால் கிரகித்தல்

## சினிமா காட்சிகளில் வரும் புகைத்தல் கட்டங்கள் சிறுவர்களிடையே புகைப்பிடித்தலைத் தூண்டுகின்றன

க 'ளில் ஏற்படும் சந்தர்ப்பம் புகைப்பிடிப்பதால் அதிகம் ஆகும். காசநோய் ஏற்படும் சந்தர்ப்பமும் புகைப்பிடிப்பதால் அதிகம் ஆகும். காசநோய் ஏற்படும் சந்தர்ப்பமும் கூடுதலாகும். புகையில் காணப்படும் 4000 வகையான இரசாயனப் பதார்த்தங்களில் 60 வகையானவை புற்றுநோயை ஏற்படுத்தும் தன்மை உடையன.

புகைப்பிடிக்கும் பிறழ்வு நடத்தையில் இருந்து விடுபட அதற்கு ஆளானதற்கான உளச் சமூக காரணிகளை ஆராயவேண்டும். சில குடும்பங்களின் பெற்றோர், சகோதரர்கள் புகைப்பிடிக்கும் பழக்கம் உடையவர்களாகக் காணப்படின் பிள்ளைகளும் புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு ஆளாகின்றனர். புகைப் பிடித்தல் [illegible] இருக்கும் என்ற ஆவல் சிறுவர்களை புகைப்பிடிக்கத் தூண்டுகிறது. இதற்கு புகைப்படங்களில் வரும், [illegible] வரும் காட்சிகளும் காரணமாக இருக்கின்றது.

கண்ணாடிப்பாத்திரங்களை வைத்து ஒன்றித்து மேலும் மேலும் புகைப்பிடிப்பர். சிலர் புகைப்பிடிப்பதால் ஞாபகசக்தி கூடுகின்றது என்பர். இது தவறான முடிவாகும். சிலர் புகைப் பிடிப்பதால் மனம் ஆறுதல் அடைகின்றது என்பர். இதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. மனதில் ஏற்படும் குறைபாடுகளை வெளியில் கூற

**டாக்டர் சி.யமுனானந்தா**
**M.B.B.S, D.T.C.D.**

விரும்பாத நிலையில் அல்லது வெளியில் கூற முடியாத நிலையில்/சூழலில் உள்ளபோது அல்லது தனிமையில் உள்ளபோது மனதிற்கு வைக்கப்படுகின்ற கொல்லியே புகைத்தல் ஆகும். சிலர் புகைபிடிப்பதால் சந்தோசமான மனநிலையை அடையும் நம்பிக்கையில் புகைக்கின்றனர். இது ஓர் உளவியல் பெருமை ஆகும். இத்திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், விளம்பரங்கள் என்பவற்றால் ஏற்பட்ட விளைவாகும். உடல் ஆரோக்கியமான தன்மை கூடும் என நினைக்கின்றனர். இது தவறானது. விளம்பரங்களால் ஏற்பட்ட நம்பிக்கை.

தவறான உளவியல் நம்பிக்கைகளாலும் உடல் இரசாயனப் பதார்த்தத்திற்கு அடிமைப்படுவதாலும் புகைத்தலை நிற்பாட்டல் என எண்ணல் புகைத்தலைத் துறத்தலை விடக் கடினமானதாக இருக்கும்.

*"கடிது கடிது புகைத்தல் துறத்தல்- மிகக் கடிது துறத்தல் எண்ணல்"*

சகபாடிகளின் சேர்க்கை பலரின் புகைப்பிடிக்கும் தன்மையை ஏற்படுத்தும். இது பொதுவாக பல்கலைக்கழக மாணவர்களிலும், ஒன்றாகத் தொழில் பார்ப்பவர்களிலும், ஒன்றாக வாழ்பவர்களிலும் காணப்படுகின்றது. மரண வீடு, திருமணவீடு, மற்றும் களியாட்டங்களின் போது இலவசமாக கிடைக்கும் சூழலே சிறுவர் இளைஞர்கள் புகைப்பிடித்தல் ஆரம்பிப்பதற்கான காரணியாக அமைகின்றது.

(10ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும்

# இலங்கை ஊடகவியலாளர்களை காப்பாற்ற விரைந்து செயற்படுங்கள்!

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் வற்புறுத்து

கொழும்பு, மே 30

இலங்கையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள பத்திரிகையாளர்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கு விரைந்து நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆபர் அம்மையாரை ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வற்புறுத்திக் கேட்டுள்ளது.

கீத் நொயர் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டமை, பாதுகாப்புச் செயலாளரினால் பத்திரிகையாளர்கள் மிரட்டப்பட்டமை போன்றவற்றைச் சுட்டிக்காட்டி லூயிஸ் ஆபரிற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் பத்திரிகையாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியான சூழ்நிலைகுறித்து அவசரமாகவும், உடனடியாகவும் உங்களது கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு ஆசிய மனித உரிமை ஆணைக்குழு விரும்புகின்றது.

பத்திரிகையாளர் கீத் நொயர் கடத்தப்பட்டுக் கடுமையாகத் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் சனத் பாலசூரியவும் பொதுச் செயலாளர் பொட்டல ஜயந்தவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் அழைக்கப்பட்டுக் கண்டிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கீத் நொயர் மே 22ஆம் திகதி அவரது அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வந்த வேளை கடத்தப்பட்டார். அவர் கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர் மறுதினம் விடுவிக்கப்பட்டார்.

இராணுவத்தின் உயர் அதிகாரிகளையும் யுத்தத்தைக் கையாளும் அரசின் போக்கையும் அவர் கடுமையாக விமர்சித்து வந்தார்.

அவருக்கு முன்னதாகவே பல மிரட்டல்கள் விடுக்கப்பட்டிருந்தன எனவும் நொயர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருந்தார் எனவும் தெரியவருகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பத்திரிகையாளரைக் கண்டித்த வேளை தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார். சுதந்திர செய்தி அறிக்கையிடலை நியாயப்படுத்தி அரசை விமர்சித்தால் அவர்களது உயிர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் எனத் தொடர்ச்சியாக அவர் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கையின் ஐந்து பத்திரிகை அமைப்புகள் கூட்டாக எழுதிய கடிதம் எமக்குக் கிடைத்துள்ளது.

கடந்த காலத்தில் இவ்வாறான எச்சரிக்கைகள் செயல்வடிவம் பெற்றுள்ளமையைக் கருத்தில் கொள்ளும் போதும்,பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இரு மூத்த பத்திரிகையாளர்களை மிரட்டியுள்ளமையைக் கருத்தில் கொள்ளும் போதும், சகல பகுதிகளிலிருந்தும் நிலைமையை சரிசெய்வதற்கான ஒன்றிணைந்த முயற்சி மேற்கொள்ளப்படுவது முக்கியமான தென்பதும் புலனாகும்.ஐக்கிய நாடுகளும் அதன் அமைப்புகளும் பத்திரிகையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை அரசை உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்கவேண்டும்.

இலங்கையின் பாதுகாப்பு நிலைவரம் குறித்துக் கவலையடைந்துள்ள நாடுகளும் இதே போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பை வழங்க வேண்டும் - என்று உள்ளது. (உ)

## நவாலியில் கோழித் திருடர்கள்

நவாலி சி[illegible]ணப்பா வீதியில் மீண்டும் கோழித் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இவ்வீதியில் பட்டப்பகல் வேளையில் ஆள் அரவம் குறைந்த நேரம் உரைப்பை, சாக்குப்பை என்பவற்றுடன் வரும் திருடர்கள் வீதியில்நிற்கும் கோழிகளுக்கு உணவுப்பொருட்களை வீசி தந்திரமாக மடக்கிப் பிடித்து தாம் வைத்திருக்கும் பைகளில் போட்டுக்கொண்டு செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறோயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**

*19, முருகேசர் லேன், நல்லூர்.*

**வான் விற்பனைக்கு**

HIACE வான் விற்பனைக்கு உண்டு.

(LH30) இல 21/4பலாலி வீதி,

3ஆம் ஒழுங்கை

யாழ்ப்பாணம்.

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

பொமேரியன் கறுப்பு, வெள்ளை நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: M. கிருஷ்ணசாமி

*றோசாத் தோட்டம்,*

*தலங்காவற் பிள்ளையார் கோவில் வீதி,*

*திருநெல்வேலி மேற்கு.*

## கண்ணீர் அஞ்சலி



*அமரர்*

**துரையப்பா வைத்திலிங்கம்**

(ஓய்வுபெற்ற மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளரும், கல்லூரி பழைய மாணவி ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் கல்லூரியின் அபிமானியும் கல்லூரி வளர்ச்சிக்கு உதவியவர்களின் நெருங்கிய உறவினருமான அமரர் துரையப்பா வைத்திலிங்கத்தின் மறைவு கல்லூரிக்கு பெரும் இழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனை பிரார்த்தித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி.

# ரணில் - மங்கள உடன்பாட்டுக்கு நீதிமன்றம் இடைக்காலத்தடை

கொழும்பு, மே 31

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (மங்கள அணி) தலைவர் மங்கள சமரவீரவுக்கும் இடையில் கடந்த ஆண்டு ஜூலை 30ஆம் திகதி கைச்சாத்தான உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு ஆட்சேபம் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அந்த வழக்கின் விசாரணை முடியும் வரை அந்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு இடைக்காலத் தடைவிதித்தது.

அநுரா பஸ்தியன், அனில் குமார விஜேயநாயக்கா ஆகிய இரு ஐ.தே.க. உறுப்பினர்கள் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

ஐ.தே.கட்சியின் தேசிய மாநாட்டில் அனுமதி பெறாமல் இத்தகைய உடன்பாடு செய்து கொளளப்படுவது சட்டவிரோதம் என்று மனுதாரர்கள் தமது மனுவில் தெரிவித்திருந்தனர்.இதுவரை இவ்வழக்கு எடுக்கப்படும் ஒவ்வொரு தவணையின் போதும், அடுத்த தவணை வரை நடைமுறையில் இருக்கக் கூடியதாக மேற்படி இடைக்காலத் தடை உத்தரவை விடுத்து வந்த நீதிமன்றம், இப்போது வழக்கு முடிந்து தீர்ப்பு வெளி வரும் வரை அத்தகைய இடைக்காலத் தடை உத்தரவை விதித்திருக்கின்றது இந்த உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிபதி சிசிர ரத்னாயக்க வழங்கினார்.(சி)

**துயர் பகிர்வு**

எமது கல்லூரி முன்னாள் பிரதி அதிபர்

திரு இ.ஓங்காரமூர்த்தி

அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் இலட்சுமணர் நித்தியலட்சுமி** அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மத்திய கல்லூரி. (74893) **ஆசிரிய நண்பர்கள்.**

## CALLING TENDERS FOR TEACHING HOSPITAL, JAFFNA
## RENOVATION OF RADIOLOGY ROOM

1. The Chairman divisional tender board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for renovation of radiology room up to 10.00 am. on 14.06.2008. Tender forms may be collected from Director Teaching Hospital, Jaffna up to 9.06.2008.on payment of non refundable deposit of Rs. 500/=
2. Tenders will be opened immediately after closing at the office of the Director Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present during the opening of tenders.
3. Tender forms are issued to contractors having valid registration in grade M9 in the field of building construction and other Institutes of Construction Training and Development (ICTAD) Criteria and valid membership of National Construction of Contractors Association in Sri Lanka (NCCASL).
4. Sealed tenders may be despatched either by registered post or hand delivered to the Director Teaching Hospital, Jaffna or deposited in the tender box at Teaching Hospital, Jaffna on or before 10.00 a.m. on 14.06.2008.
5. Tender forms may be inspected free of charge at the resident Engineer's office CECBTH, Jaffna.
6. For futher details please contact Director Teaching Hospital, Jaffna

*The Chairman*
*Divisional tender board*
*jaffna*

## மூன்று பொலிஸார் காயம்

வவுனியா, செல்வநகர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பெண் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்தச்சென்ற பொலிஸாரின் ஜீப் மீது பம்பைமடு, செக்கட்டிப்புலவுப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் காலை 9.45 மணியளவில் கிளைமோர்த் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது. அதில் பொலிஸார் மூவர் படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்தவர்களில் ஒருவ[illegible] (சி)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 1974.02.28

அநியாய அழிப்பில்: 2008.04.17

*அமரர்*

**சின்னத்துரை சிவனேசன்**


(உரிமையாளர் துவாரகன், தொலைத்தொடர்பகம்)

தம்பி!
பிள்ளையாய்... அண்ணனாய்...
தோழனாய்.... இல்லையே... எங்கள்
செல்லமாய்த் தானடா தாங்கினோம்....!
வெள்ளமாய்ச் சிந்திய குருதியால்
எம் விழிகளின் ஒளியினை மறைத்தனை ஏனடா? ஏங்கினோம்!
எங்கள்....
விழுதினை அறுத்ததால் துடிக்கிறோம் - அவர்
ஆன்மா சாந்திபெற வேண்டுகிறோம்.

*219/4, கனகசபை அவெனியூ*
*[illegible]ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்*

தாய், சகோதரர்கள், சகோதரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில் பெருந்திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த 20ஆம் திகதி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமை உரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி கேதாரணி பிரபாகரனுக்குப் பரிசில் வழங்கி கௌரவிப்பதை இரண்டாது படதிலும் காணலாம்.

நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்தில் காணலாம். *(படங்கள்: சுந்தா)*

# நூறு நாடகங்களில் காணக் கூடியதை இவரது ஒரு நாடகத்தில் காணலாம்

## குழந்தை சண்முகலிங்கத்தின் படைப்புகள் குறித்து சிங்கள இயக்குநர்



குழந்தை சண்முகலிங்கம் எழுதிய மூன்று நாடகங்களின் ஆங்கில மொழிபெயர்பு நூல் வெளியீட்டு விழா கடந்த புதன்கிழமை 28.05.2008) யாழ்.பல்கலைக்கழக புவியியல் மண்டபத்தில் இடம்பெற்றது.

மண்சுமந்த மேனியர், எந்தையும் தாயும், வேள்வித் தீ ஆகிய மூன்று நாடகங்களும் கவிஞர் சே.பத்தமநாதனால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இந்த விழாவில் இந்த மூன்று நாடகங்கள் குறித்தும் நாடக நெறியாள்கையாளரும் ரூபவாகினிக் கூட்டுத்தாபனப் பணிபாளரும் எழுத்தாளருமான பராக்கிரம நிரியெல்ல பிரதான உரையாற்றினார். அவரது உரையின் தொகுப்பு இது:

எச்.ஏ.பெரேரா மற்றும் சரச்சந்திரவுடன் இணைந்து கடமையாற்றிய நண்பர்களும் என்னுடன் இங்கு வந்துள்ளனர். நான் பல முறை யாழ்ப்பாணம் வந்துள்ளேன். இது எட்டாவது முறை. ரூபவாகினி கூட்டுத்தாபன பணிப்பாளராக இருந்தபொழுது மிகக் கடுமையான சூழ்நிலையில் இங்குள்ள கலைஞர் ஒருவர் நாடகமொன்றை மேடையேற்றியதாக அறிந்தேன். அவரை சந்திக்க நினைத்தேன். இந்திய இலங்கை ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலத்திலேயே அவரைச் சந்தித்தேன்.

இந்திய இராணுவத்தை யாழ்பாணத்து மக்கள் வரவேற்ற சூழ்நிலையிலேயே அவரைச் சந்தித்தேன். பொதுமக்கள் அந்த இராணுவத்தை மகிழ்வாக வரவேற்ற அந்த நேரத்தில் குழந்தை சண்முகலிங்கம் என்னிடம் கூறிய கருத்தென்னவென்றால் இந்த சமாதானம் பெரிய அழிவாகத்தான் இருக்கப்போகிறதென்பதாகும்.

இந்தச் நூலாசிரியர் பற்றிய முழுத் தகவலையும் அந்த நேரத்தில் அறிந்திருக்கவில்லை. சிங்கள மொழியில் வாசிக்கவில்லை. நாடகமும் அரங்கியலும் தொடர்பான சில குறிப்புக்களிலேயே அவரைப் பற்றிய செய்திகளை அறியமுடிந்தது.

தனது சமூகத்திற்கு மிகப்பெரும் சேவையாற்றும் கலைஞனெனப் புரிந்து கொண்டேன். சமீபகாலத்தில் டக்ளஸ் தேவாணந்தா குழந்தை எழுதிய சில பிரதிகளை அங்கு கொண்டுவந்திருந்தார். அவை தமிழில் இருந்தன. எமக்கு தமிழ் கற்க வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனினும் எமது நாடகக் குழு சார்ந்த தமிழ் கலைஞர்கள் மூலம் அறிய விரும்பினேன், எனினும் முழுதாக முடியவில்லை. அவர்களது கருத்துப்படி அவை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட- பாதிப்புற்ற தமிழரது விடயத்தை கொண்டிருந்ததென்பதை அறிந்து கொண்டேன்.

தெண்ணிலங்கை நாடக ஆசிரியர்கள் மொழிபெயர்ப்பு நாடகம் பற்றி அக்கறை கொண்டிருந்தார்கள். யுத்தப்பாதிப்பு மையமாக இருந்தாலும் அதன் உள் பொருள்களை மேல்நாட்டு நாடக மூலம் பெறக்கூடியதாக இருந்ததால் குழந்தை சண்முகலிங்கத்தின் நாடகத்தை மேடையேற்ற விரும்பினேன்.

சிறந்த மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்ட பொழுது சோ.பத்மநாதனின் இந்த மொழி பெயர்ப்பு நூல் எனக்குக் கிடைத்தது.

மூன்று நாடகங்களையும் வாசித்தேன். அதனூடாக குழந்தை சண்முகலிங்கம் எனக்கு அறிமுகமானார்.

நாங்கள் ஒரு சிறு தீவில் வசித்தும் அவரது நாடகத்தைப் பார்க்க முடியாதிருந்தது. வாசிக்கக் கிடைத்தது. எமது கலைஞர்கள் சார்பாக எனது நன்றி.

### நல்ல நாடகம் எது?

நான் கலைஞன் மட்டுமே. திறனாய்வு முன் வைக்க முடியவில்லை. காரணம் நான் நாடகம் பார்க்கவில்லை. நாடகம் மேடைக் குரியதாகும். சிறந்த நாடகம் மேடை ஏற வேண்டும். நாடகம் எழுதாமல் நாடகம் நடிக்கப்படுவதுமுண்டு.

நல்ல பிரதி நாடகமாகாது. உரையுடன் நாடகத்தன்மையுடையதாக இருக்க வேண்டும். இது இன்று வெளியிடப்படும் புத்தகத்தின் உள்ளடக்கம் பற்றிய ஆலோசனை மட்டுமே. நாடகம் பார்க்க கிடைக்காததால் வாசித்து மனப்படிமத்தைக் கொண்டே கருத்தை முன்வைக்கக் கூடியதாக உள்ளது.

### மண் சுமந்த மேனியர்

நூலாசிரியர் 120 நாடக நூல்களை எழுதியதாக தெரிவிக்கப்படுகின்றது. அவர் பல நூல்களை ஆய்வு செய்தவராக இருக்கலாம். மண்சுமந்த மேனியர் நாடகத்தை எடுத்தால் எந்தப் பாரம்பரியத்தை சேர்ந்; தெனக் கூறமுடியாது.

யுத்தப் பாதிப்புக்குரிய ஒன்று மட்டும் என்பதே தெரிகிறது. இந்த நூல் 1986இல் எழுதப்பட்டதென்பது குறிப்பு. 1983இலும் அதற்கு முன்பும் மேற்கொள்ளப்பட்டது இன வன்முறை மட்டுமே. பின்பே யுத்தப் பாதிப்பு ஏற்படுகிறது.

இதற்கெதிராக இளைஞர்களின் விடுதலைப் பயணம் தொடர்வதால் குடும்பம் சிதறுகிறது. தொழில் முடங்கி பாதிப்புறுகிறது. பயம், எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற தன்மை உருவாகிறது. இந்த நிலவரங்களையும் அது தொடர்பான மக்களது மன நிலையை வெளிக்கொண்டு வரும் முயற்சியை காண முடிகிறது.

இதில் பாரம்பரிய நாடகத்தன்மை இல்லை. அதுபலவீனமல்ல. அடுத்து என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பு இல்லை.எனினும் ரசிகர்கள் உரையாடல் மூலம் மக்கள் மனதை புரியலாம்.

(தொடர்ச்சி 08ஆம் பக்கம் பார்க்க)

# தென்மராட்சிப் பிரதேசத்திற்குஅருகிலுள்ள வீதி ஊடான போக்குவரத்து தடை

யாழ்ப்பாணம், மே 31

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் தென்மராட் சிப் பிரதேச செயலகத்திற்கு அருகில் உள்ள வீதி வாகனப் போக்கு வரத்துக்கு தற்கா லிகமாக தடை செய்யப்பட்டுள்ளது.

இவ் வீதி சாவகச்சேரி நகரசபை யினால் சிமெந்து கொங்கிறீற் வீதியாக மாற்றுவதற்கான வேலைகள் நடைபெறுவதை யிட்டு வாகனங்கள் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

திருத்த வேலைகள் முடியும் வரை வாகனங்களை காளிகோயில் வீதி ஊடா கச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள டச் வீதி வாகனப் போக்கு வரத்துக்கு தடை செய்யப்பட்டதையடுத்து இவ் வீதியினை வாகனங்கள் பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (202-207)

# சுகாதார முகாமை உதவியாளர் பதவி; போட்டிப் பரீட்சை 7, 8 ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம் மே 31

சுகாதார முகாமை உதவியாளர் சேவை வகுப்பு III இற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர் வரும் 7 ஆம், 8ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாாணத்தின் சகல மாவட்டங் களிலும் நடைபெறவுள்ளது.

மாகாணபொதுச் சேவை ஆணைக் குழு நடத்தவுள்ள இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் சகல பரீட்சார்த் திகளுக்கும் அனுப்பி வைக்கப்பட் டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் 060 226 2951 அல்லது 026 222 6951 (709) என்ற தொலைபேசி எண்கள் ஊடாகத் தொடர்பு கொள்ளுமாறு ஆணைக் குழுவின் செயலாளர் எஸ். திருவாகரன் கேட்டுள்ளார். (202)

# தடுப்பூசி ஏற்றல் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மே31

கொழும்பில் இருந்து விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து (வக்சீன்) வந்து சேராததால் யாழ்.மாநகசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு திட்டமிட்டவாறு எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறாது என மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார் (202)

# கல்வியியற் கல்லூரி, மின்சாரசபை ஊழியர்கள் அமைச்சருடன் பேச்சு

யாழ்ப்பாணம்,மே31

யாழ்.கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள் மின்சாரசபை ஊழியர்கள், மின் இணைப்பு ஊழியர்கள் ஆகியோர் கடந்த புதன்கிழமை சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து தங்களது பணி சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர் கருத்துத் தெரிவித்தபோது, கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்களின் பணிகள் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் மின்சாரசபை ஊழியர்களின் பணிசார்ந்த பிரச்சினைகள் வெகு விரைவில் தீர்க்கப்படவுள்ளதென்றும் தெரிவித்தார்.

மின் இணைப்பு ஊழியர்கள் தங்களது பணிசார்ந்த பிரச்சினைகளைத் தற்போது தான் முன்வைத்துள்ளனர் என்பதால் இவர்களது பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு கால அவகாசம் தேவை என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொழில் சார்ந்த பிரச்சினைகள் இன்னும் சில மாதங்களில் கணிசமானளவு தீர்த்து வைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (1)

# திருத்த வேலைகளுக்காக குறிப்பிட்ட சில இடங்களில் இன்று மின்தடை

யாழ்ப்பாணம்,மே31

அவசர திருத்த வேலைகள் காரணமாக இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை குறிப்பிட்ட சில இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரை நகர், வேலணை, ஊர்காவற்றுறை,

அராலி, மானிப்பாய், கட்டுடை, சங்குவேலி, உடுவில், மருதனார்மடம், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களிலேயே இன்று மின் தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (202)

# பெரியபுலம் ம.வியில் அழகியல் கண்காட்சி

யாழ்ப்பாணம்,மே31

பெரியபுலம் மகாவித்தியாலய அரங்கப்புலம் நடத்தும் அழகியல் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமையும் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

அதிபர் சி.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கலந்துகொள்வார். (202)

# இருபாலை சி.சி.த.க. பாடசாலையில் திருட்டு

கோப்பாய்,மே31

இருபாலை சி.சி.த.க. பாடசாலையின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

மதிய உணவிற்காகச் சேமித்து வைக்கப்பட்டிருந்தஉணவுப் பொருள்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

அலுவலகத்தை உடைத்து அத்திருட்டு இடம்பெற்றுள்ளது என்றும்- அதிகளவில் சீனி திருடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (202-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி லயன்ஸ் கழகக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே.30

சாவகச்சேரி லயஸ்ஸ்கழக நிர்வாகிகளுக்கான கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 10.30 மணிக்கு கழக அலுவலகத்தில் நடைபெறுமென கழகச் செயலாளர் லயன் செ. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

## மானிப்பாய் பாடசாலைக்கு யுனிசெவ் அன்பளிப்பு

நவாலி, மே.31

மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் பாடசாலைக்கு யுனி செவ் நிறுவனம் விளையாட்டு முற்றத்துக்குரிய பல லட்சம் ரூபா பெறுமதியான சறுக்கீஸ், ஊஞ்சல் உட்பட்ட விளையாட்டு உப கரணங்களை வழங்கியுள்ளது. இதனால் அப் பாடசாலைப் பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் விளையாட்டு நேரத்தில் தாம் விரும்பியவிளை யாட்டுக்களைவிளை யாடி வருவதாக பாடசாலை அதிபர் செபஸ்ரியாம் பிள்ளைஅழகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

(202-100)


### யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
அரங்கப் புலம் நடத்தும்
### மாபெரும் அழகியல் கண்காட்சி
(சித்திரம், நாடகமும் அரங்கியலும் துறைகளுக்குரியது)

காலம்: 01.06.2008, 02.06.2008 (ஞாயிறு, திங்கள்)
நேரம்: மு.ப.9.00 மணி - பி.ப.4.00 மணி வரை
தலைவர்: திரு.சி.இராமலிங்கம் (அதிபர்)
பிரதம விருந்தினர்:திரு.எஸ்.கே.யோகநாதன் (பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி)
சிறப்பு விருந்தினர்:திரு.கே.குணசேகரம் (கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்)
அண்ணாவியார் ம.ஜெயக்குமாரின் புரவி ஆட்டம் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பிரவேசம்: ரூபா 10.00 (மாணவர்களுக்கு)
ரூபா 20.00 (ஏனையோருக்கு)
அரங்கப்புலம், பாடசாலைச் சமூகம்.
(சி/553020)
விளம்பர அனுசரணை: UNIT 347, K.K.S.Road, Manohara Junction. Jaffna T.P.: 021 222 8844


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




கனடா, மொன்றியலில் வசிக்கும் ஜெயசுதாகர் மனோஜா தம்பதிகளின் செல்வப் புதல்வன் **மிதுஷன்** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (31.05.2008) சனிக்கிழமை மொன்றியலில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அன்ரா, அத்தை, சித்தப்பா, மாமா, மச்சான், மச்சாள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் முத்துமாரி அம்மன் துணையுடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: மா.இராஜேந்திரம் (அம்மப்பா)
புதுத்தோட்டம் , அல்வாய் தெற்கு,
அல்வாய்.


## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 26.05.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

ராஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப் புளியடி
மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு
P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(74439)



DLF IPL CRICKET OFFER
ஜூன் 4 வரை மட்டும்
DISH TV package ரூபா 9000/-
இருந்து (6 மாத இலவச சந்தாவுடன்)
★ DISH TV இற்குரிய கட்டணங்கள் செலுத்தி ஒரு மணி நேரத்தில் Activate செய்து கொள்ளலாம்.
★ DISH TV ரிசீவருக்குரிய அனைத்து Software களும் மாற்றிக் கொள்ளலாம்
★ மற்றும் கேபிள் TV ... அனைத்து உதிரிப்பாகங்களும் மலிவான விலையில் ...
★ உங்கள் கேபிள் நெட் வேர்க் சம்பந்தமான அனைத்து தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படும்.



மேலதிக விபரங்களுக்கு:
SATS-TECH ENGINEERS
இல.132,கே.கே.எஸ்.வீதி, குளப்பிட்டி சேச் அருகில், கொக்குவில்.
(74309) Phone :- 222 5908 / 0777 710785


## நீங்கா நினைவுகள்
## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 04.09.1929 உதிர்வு: 15.05.2004

அமரர்
### விசுவநாதர் சுப்பிரமணியம்
(இளைப்பாறிய ஆசிரியர்)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்".

10 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு மத்தி,
நெடுந்தீவு.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

541, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.தொ.பே: 0212228536


## மணமகள் தேவை

பருத்தித்துறை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 31, உயரம் 5'5", பல்கலைக்கழகத்தில் படித்து B.Sc (Technical) பட்டம் பெற்ற மணமகனுக்கு குறைந்தபட்சம் A/L Qualifed ஆன 25 வயதிற்குட்பட்ட, பண்பான அழகிய மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தொண்டைமானாறைச் சேர்ந்தோர் விரும்பத்தக்கது.

அனுப்பவேண்டிய விவரம்
1. சுயவிவரத்துடன் முழுப்படம்
2. மகாதிசை இருப்புடன் ஜாதக்குறிப்பு
3. பிறந்தநாளும் நேரமும்
4. முகவரியும் தொலைபேசி இலக்கமும்

முக்கிய குறிப்பு: ஜாதகம் பொருந்தாவிடின் நீங்கள் அனுப்பும் விவரக்கொத்து காததிரமான முறையில் பத்திரமாக அனுப்பிவைக்கப்படும்.
தொடர்பு: thirumahal25@gmail.com
உங்கள் விபரம் Email இலும் அனுப்பலாம்.
விளம்பர இல. 3101, C/O உதயன்
361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## Guitar Notes

வீட்டில் இருந்தவாறே Guitar ஐக் கற்றுக்கொள்ளக்கூடியவாறு தமிழ் விளக்கங்களுடன் கூடிய கைநூல் வெளிவந்துள்ளது.
S.S.Rajcendran, 75, Temple road, Nallur, T.P: 0777031293.



COMPUTER EXPRESS
Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna.021 222 8250
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

ஒருவருடகால முழுநேர கற்கைநெறிகள்

Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing
❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

Diploma in Video Editing
முன்னணி Video Mixing Software களுடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D ...
❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

Diploma in Graphic Designing
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio
❖ Micro Media Flash
Course Fee : 2000/=

Diploma in Quick Books
பிரபல கணனிக்கணக்கியல் மென்பொருள்
Course Fee : 2000/=

வகுப்புக்கள் ஆரம்பம் :02/06/2008 09.00AM


## குருளைச் சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே31

சாவகச்சேரி மகளிர் கல்லூரி குருளைச் சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி சி. சிவநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாவட்ட சாரண துணையாளர் செ. சுப்பிரமணியம் விருந்தினராகக் கலந்து கொண்டார்.

குருளைச் சாரண தலைவிகளான சாரண ஆக்கேலா திரு மதி அ. சிவரஞ்சன், உதவி ஆக்கேலா திருமதி. ச.பாலகிருஷ்ணன் ஆகியோர் சின்னங் ...

(202-...)

## 21ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில் மலராக: 26.11.1935



விண்ணில் விளக்காக: 11.05.2008

அமரர்
### வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினம்

பிறப்புமுதல் இறப்புவரை
பெரும் செல்வக் குலமகளாய்
பெருமை பெற்று
சிறப்பமைந்த அறிவறிந்து செய்கருமந்தனில்
சிறந்து சீர்மை பேணி
செயற்கரிய நீள் கடமைதனை புரிந்து
நிறைவு பெற்று இறைபதம் சேர்
எம் தாயின் இணையடிகள்
தொழுது என்றும் வணங்கி நிற்போம்.

சுதுமலை மேற்கு, மானிப்பாய். (74836) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி குணரட்ணம் அன்னலட்சுமி

(குணமாமி)



இருபாலையைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரட்ணம் அன்னலட்சுமி 27.05.2008 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை குணரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் பாலசுப்பிரமணியம் (பிள்ளையார் ரான்ஸ்போட், சங்கானை), விஜயலட்சுமி, விஜயநாதன், விஜயகாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியபாமா, ஜெயந்தினி, சின்னராசா, சிவமணி (ரமணி), சித்திரகலா (கவித்திரா - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கருணாகரன், கபிலதர்சினி (கௌரி), சுஜிதா, ஆதவன், கார்த்திகா, அச்சுதன், சுதர்சனா, சுதர்சன், சுகர்ணன், சுலக்ஷ்சன், சுகனியா, அஜித்தன், அர்விந், அபிஷன், ஆர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நவீன்குமாரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2008) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி.பாலசுப்பிரமணியம்
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. சி.553030 (பிள்ளையார் ரான்ஸ்போட், சங்கானை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள "எக்ஸ்-கதிர்" இயந்திரங்கள் மூன்று பழுது

## இதனால் நோயாளர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,மே31

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள எக்ஸ் கதிர் கருவிகள் மூன்று பழுதடைந்து பல மாதங்களாகியபோதிலும் அவற்றைத் திருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையில் நான்கு எக்ஸ் கதிர் படம் எடுக்கும் கருவிகள் காணப்படுகின்றன. இதில் இரண்டு கருவிகள் பழுதடைந்து ஆறு மாதங்களுக்கு மேலாகின்றது. மற்றும் ஒரு கருவியும் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் பழுதடைந்தது. தற்போது ஓர் எக்ஸ் கதிர் படம் எடுக்கும் கருவியே செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றது.

இந்த வைத்தியசாலையில் நாள் ஒன்றுக்கு சராசரியாக இருநூற்றி இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நோயாளர்கள் எக்ஸ் கதிர் படம் பிடிக்க வருகின்றார்கள்.

ஒரு கருவி மட்டுமே செயற்படுவதன் காரணத்தினால் வைத்தியசாலையில் எக்ஸ் கதிர் எடுப்பவர்களின் முழுத் தேவையையும் பூர்த்திசெய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகத் தற்போது அவசர நோயாளர்கள் வெளியால் கொண்டு சென்று எக்ஸ் கதிர் படப்பிடிப்புக்கு உள்ளாக்கப்படுவதாகவும் இதற்கு 350 ரூபாவுக்கு மேல் செலவு ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டு கின்றது.

இந்தக் கருவிகளைத் திருத்துவதற்கு உரிய தொழில்நுட்பவியலாளர்கள் தென்னிலங்கையில் இருந்து தான் வரவேண்டும் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கதாகும். (202-68)

# கிராம, மாதர் அபிவிருத்திச் சங்கங்களை புதிய யாப்பின்படி பதிவுசெய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மே31

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்களைப் புதிய யாப்பின்படி பதிவுசெய்வதற்கு விண்ணப்பிக்குமாறு வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் வீ.குமாரசிங்கம் கேட்டுள்ளார்.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் தமது பழைய யாப்பின் பிரகாரம் பதிவுக்காக அனுப்பிவைக்கப்படின் அதனை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில்:

யாழ்.மாவட்டத்தில் இருந்து கிராம மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்களை பதிவுசெய்யும் பொருட்டு பழைய யாப்பின் பிரகாரம் பதிவுக்காக அனுப்பிவைக்கப்படுவதாகவும் எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து பழைய யாப்பின் பிரகாரம் பதிவுக்கு அனுப்பப்படுவது ஏற்கப்படமாட்டாது எனவும் -

புதிய யாப்பின் பிரகாரம் தமது பதிவுக்கான விண்ணப்பங்களைச் சங்கங்கள் அனுப்பிவைக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-111)

# சிறு தானியச் செய்கையை ஊக்குவிக்க 'சொன்ட்' நிறுவனம் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,மே31

யாழ்.மாவட்டத்தில் சிறுதானியப் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கு 'சொன்ட்' நிறுவனம் செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு சிறுதானியச் செய்கையை மேற்கொள்வதற்காக கச்சான், கௌபி, பயறு, உழுந்து, குரக்கன் ஆகிய விதையினங்களை நிறுவனம் வழங்கியுள்ளது. அத்துடன் இப்பயிர்ச்செய்கைக்குத் தேவையான உரம் மற்றும் மண்எண்ணெய் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, கரவெட்டி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஊக்குவிப்புச் செயற்றிட்டங்கள் யாவும் அவ்வப் பிரதேச விவசாய சம்மேளனத்தினர் மற்றும் விவசாய உத்தியோகத்தினரது அனுமதியுடனேயே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என நிறுவன திட்ட இணைப்பாளர் க.செந்தூரன் தெரிவித்தார். (202)

## இலங்கை வங்கியில்

# யாழ்.மாவட்ட ஓய்வுபெற்ற ஊழியர், மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், மே31

இலங்கை வங்கியின் யாழ்.மாவட்டக் கிளைகளிலிருந்து ஓய்வுபெற்ற ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் ஊழியர்களின் பிள்ளைகளுள் கல்விசார் திறமைசாலிகளைப் பாராட்டும் நிகழ்வும் வங்கியின் யாழ்.மாவட்ட விளையாட்டு நலன்புரிக் கழகத்தினால் அண்மையில் நடத்தப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மேற்தரக் கிளை மண்டபத்தில் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளரும் மாவட்ட விளையாட்டுக் கழகத் தலைவருமான பி.ஏ.அருமைநாயகம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் குறுநாடகம், நகைச்சுவை, பாடல் உட்படப் பல கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (202)



வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம், கௌரவிக்கப்பட்ட ஊழியர்களான ம.ரிச்சேட், சி.ஆர்.சிதம்பரநாதன், ஆர்.ஈஸ்வரபாதம், எஸ்.செல்வரஞ்சன் மற்றும் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரத்தினம் ஆகியோரை முதலாவது படத்தில் காணலாம்.

கௌரவிக்கப்பட்ட ஊழியர்களின் பிள்ளைகளான (பின்வரிசை - இடமிருந்து வலம்) தி.சேந்தன், பு.தபோகரன், சு.திசனா, ச.பானுரேகா, இ.கதுஷா, சு.தாரணி, த.நிருஷன்.

(முன்வரிசை - இடமிருந்து வலம்) யோ.பிரணவன், பு.சாகித்தியா, வி.தர்சனன், ச.அனுசாயினி, ஜோ.ஹம்சத்வனி ஆகியோரை இரண்டாவது படத்தில் காணலாம்.

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# இனந்தெரியாத கும்பல் தாக்கி தந்தையும் மகனும் காயம்

யாழ்ப்பாணம்,மே31

வண்ணார்பண்ணை, பத்திரகாளி கோயிலடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இனந்தெரியாத கும்பல் ஒன்று புகுந்து தாக்கியதில் தந்தையும் மகனும் காயங்களுக்கு உள்ளாகினர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டுற்குள் பொல்லுகள், இரும்பு ஆயுதங்கள் சகிதம் புகுந்த கோஷ்டி அங்கிருந்த தந்தையையும் மகனையும் தாக்கியது.

தலையில் பலமாகக் காயமடைந்த மகனான எஸ்.சிவரூபன் (வயது 19) சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தலையில் காயமடைந்த தந்தை சிகிச்சை பெற்று உடனேயே வீடு திரும்பினார். (202)

# உதைபந்தாட்டம்

கரவெட்டி,மே31

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் வி.கவும் சுடரொளி வி.கவும் மோதுகின்றன. (1-70)

# 'ஜீவநதி' சஞ்சிகை வெளியீடு இன்று

கோப்பாய்,மே31

'ஜீவநதி' கலை இலக்கிய சஞ்சிகையின் முதலாவது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள கலை அகத்தில் இடம்பெறவுள்ளது.

மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் தெணியான் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலர் இ.சத்தியசீலனும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையை மருத்துவர் வே.கமலநாதனும் மதிப்பீட்டுரைகளை ஆசிரியர் ம.பா.மகாலிங்கசிவம், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருந்தாகரன் ஆகியோரும் நிகழ்த்துவர். யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி கருத்துரை வழங்குவார்.

ஜீவநதி சிற்றிதழை யாழ்.பல்கலைக் கழக மாணவர் க.பரணிதரனும் சி.விமலனும் இணை ஆசிரியர்களாகச் செயற்பட்டு வெளியிட்டு வருகின்றனர். (202-72)

# அல்லைப்பிட்டி, மண்கும்பான் மக்களை மீளக் குடியமர்த்த டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே31

அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் மீளக்குடியமர விரும்புபவர்களை குடியமர்த்துவதற்கான பல்வேறு செயல் திட்டங்களை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுக்க துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

அல்லைப்பிட்டிப் பகுதியில் 81 குடும்பங்களைச் சேர்ந்த 351 பேர் வசித்து வருகின்றனர். இந்நிலையில் 63 குடும்பங்களைச் சேர்ந்த 199 பேர் மீளக் குடியமர்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதுடன் 25 குடும்பங்களைச் சேர்ந்த 90 பேர் தங்களது இருப்பிடங்களுக்குச் சென்று பார்வையிட விருப்பம் தெரிவித்துள்ளனர். இதேநேரம் மண்கும்பான் பகுதியில் 29 குடும்பங்களைச் சேர்ந்த 192 பேர் மீளக்குடியமர்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அல்லைப்பிட்டி மற்றும் மண்கும்பான் பகுதிகளில் நிலவுகின்ற பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளும்முகமாக அப்பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகள் கடந்த புதன்கிழமை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விஷேட செயற்பாட்டுக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சர் அவர்களின் யாழ்.அலுவலகத்தில் சந்தித்தனர்.

அதன்போது கடற்தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினை அதிகரித்தல், அல்லைப்பிட்டிக்கான பேருந்துப் போக்குவரத்துச் சேவை, மின்சாரம், சனசமூக நிலையம், வாசிகசாலை, தேவாலயப் புனரமைப்பு, வீட்டுத்திட்டம், பண்ணை வேலை, தொழிற்பயிற்சி, விவசாய, கால்நடைகளுக்கான உபகரணங்கள், பாடசாலைக் கட்டடப் பணிகள் மற்றும் தளபாடங்கள், கடற்றொழில் உபகரணங்கள், மருத்துவமனை வசதி போன்ற பல்வேறு பொதுவசதிகள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.



இதன்பிரகாரம் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான கடற்பிரதேசத்தை அதிகரிப்பதற்கு இணங்காணப்பட்டுள்ளது. அதேநேரம் சாட்டி வீதியை திருத்தி அமைத்து அதனூடாகப் பேருந்து போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கும் வாசிகசாலை, சனசமூக நிலையம், தேவாலயம்போன்றவற்றை புனரமைப்புச் செய்தவதற்கும் பாடசாலைக்கான தளபாடங்கள், விவசாய மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் போன்றவற்றை வழங்குதவற்கும் அப்பகுதி இல்லங்களுக்கு கூடிய விரைவில் மின்சார வசதிகளை வழங்கவும், இயன்றளவு விரைவாக அல்லைப்பிட்டி பகுதியில் மருத்துவமனை ஒன்றை அமைப்பதற்கும் இணக்கங் காணப்பட்டன.

மேற்படி வேலை திட்டங்களுக்கு கியூடெக், கரித்தாஸ் மற்றும் சோஆ போன்ற தொண்டர் அமைப்புகளின் உதவிகளும் பெற்றுக்கொள்ளப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தச் சந்திப்பில் யாழ்.திட்டப் பணிப்பாளர், படைத் தரப்பின் உயர் அதிகாரிகள், அல்லைப்பிட்டி கிராமசேவை உத்தியோகத்தர், வேலணை பிரதேச செயலாளர், மின்சாரசபை அதிகாரிகள், கியூடெக் மற்றும் கரித்தாஸ் தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட அமைச்சு அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (1)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே31

உடுப்பிட்டி, இமையாணன், திடல் பத்திரகாரளி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 9ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 18ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202)

* * *

சுழிபுரம்,மே31

சுழிபுரம் - வடகிழக்கு சோழியபுரம் சம்பு நாகேஸ்வரர் கோயில் [illegible] எதிர்வரும் புதன்கிழமை காலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கோயில் போர் அனர்த்தங்களால் பெரிதும் சேதமுற்றிருந்தது. தற்போது இக் கோயில் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்குகின்றன. (202-28)

* * *

சுழிபுரம்,மே31

கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை காலை முதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 நாள்களுக்கு மண்டலாபிஷேகம் இடம்பெறும். (202-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலைகளைத் தவிர்க்கும் நடவடிக்கைகளுக்கான ஐ.நா. பிரதிநிதியின் சிபாரிசுகள் குப்பைக் கூடைக்குள்!

## இலங்கை நிலை குறித்து அவர் மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு அறிக்கை

கொழும்பு,மே31

இலங்கையில் சட்டவிரோதப் படுகொலைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகத் தான் முன்வைத்த பரிந்துரைகளை இலங்கை அரசு முற்றாகப் புறக்கணித்துவிட்டதாகச் சட்டவிரோதப் படுகொலைகளைக் குறித்த ஐ.நா.சபையின் விசேட அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்டொன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையும் மனித உரிமைக் கவுன்ஸிலும் கூட அர்த்தபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லையெனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்ஸிலின் எதிர்வரும் கூட்டத்தொடரில் சமர்ப்பிப்பதற்காகத் தாம் முன்வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் இது குறித்துத் தெரிவித்துள்ளார்.

அரச கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுக்குத் தகவல் வழங்குபவர்கள் எனக் கருதப்படுபவர்களை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவுடன் இராணுவம் கொலை செய்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் பேரணிகளில் கலந்துகொண்டவர்கள், இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் எனக் கருதப்படுபவர்கள் கொல்லப்படுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ள பிலிப் அல்ஸ் டொன் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மனித உரிமைகளை மதிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு தவறியமைக்கு' பாரிய அளவு மோதல்கள் வெடித்தமையே காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மற்றும் உரிமை ஏற்பாடுகளை மதித்தபடியே யுத்தத்தில் ஈடுபடலாம்.

எனினும் அரசும் விடுதலைப் புலிகளும் மனித உரிமைகளையும், அதனைப் பாதுகாக்க முயல்பவர்களையும் கொலை செய்கின்றனர்.

விசேட அறிக்கையாளர் 2005 நவம்பர் 28ஆம் திகதியிலிருந்து டிசம்பர் 26ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். வடக்குக் கிழக்கிற்கான விஜயத்தின் பின்னர் சட்டவிரோதப் படுகொலைகள் பரந்துபட்ட அளவில் இடம்பெறுகின்றன என்ற முடிவிற்கும் அவர் வந்தார்.

விசேட அறிக்கையாளருக்குக் கிடைத்த அறிக்கைகளின்படி இலங்கையில் சட்டவிரோத படுகொலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினரை அதற்குப் பொறுப்பாளிகளாக்கும் ஏற்பாடுகளை அகற்றும் முயற்சிகளும் இடம்பெற்றுள்ளன.

ஆனால், வலிமையான கிளர்ச்சி மற்றும் எதிர்க்கிளர்ச்சி நடவடிக்கைகளின் போது சட்டவிரோதப் படுகொலைகளுக்கும் இடமுண்டு என இரு தரப்பும் நம்புகின்றன.

இதன்காரணமாகவே பரந்துபட்ட மனித உரிமை துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

இரு தரப்பும் எதிர்த்தரப்பிற்கு உதவுபவர்கள் என தாம் கருதுபவர்களை இலக்கு வைத்துக் கொல்கின்றன.

அரசும் விடுதலைப் புலிகளும் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளனர். இதில் பெருமளவு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இன்னொரு பக்கத்தில் மனித உரிமை மீறல்கள் அவசியமென இரு தரப்பும் கருதுவதால் மனித உரிமை ஆர்வலர்களையும் துரோகிகள் மற்றும் எதிரிகள் என அவர்களும் கருதும் நிலை காணப்படுகின்றது.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளவர்களை அதற்குப் பொறுப்பாளிகளாக்கும் ஏற்பாடுகளைத் தமது வெற்றிக்கான தடையாக இரு தரப்பினரும் கருதுகின்றனர்.

இதன் காரணமாகவே விசேட அறிக்கையாளரின் பரிந்துரைகளை இரு தரப்பினராலும் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளன.

எனினும், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையும், மனித உரிமைக் கவுன்ஸிலும் ஏன் அர்த்தபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது ஆச்சரியமாகவுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# செஞ்சிலுவையின் ஏற்பாட்டில் இன்று விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்,மே31

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளை இளையர் வட்டத்தின் ஏற்பாட்டில் செஞ்சிலுவை தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் கே.குமாரசாமி கலந்துகொள்வார்.

இந்தப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மட வித்தியாலயம் ஆகியன பங்குபற்றவுள்ளன. (202)

# மீண்டும் ஊடகங்களுக்கு எதிராக கிரிமினல் குற்ற அவதூறுச் சட்டம்?

கொழும்பு, மே 31

ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக கடும் சீற்றம் கொண்டிருக்கும் அரசுத் தலைமை, ஊடகவியலாளர்களை சட்ட ரீதியாக அச்சுறுத்தி அடக்கும் நோக்கில் மீண்டும் கிரிமினல் குற்ற அவதூறுச் சட்டத்தைக் கொண்டுவருவதற்குத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊடக சுதந்திரத்துக்கு எதிரான மோசமான சட்டம் என்று வர்ணிக்கப்படும் இந்த ஒழுங்கு விதி, ஊடகம் ஒன்றில் வெளியாகும் அவதூறுச் செய்திக்காக ஊடகவியலாளரை கிரிமினல் குற்றப் பொறுப்பாக்குவதற்கு வழி செய்கிறது.

இலங்கையில் முன்னர் நடைமுறையில் இருந்த இந்தச் சட்டம் குறித்துப் பல தரப்புகளிலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டமையை அடுத்து 2001 டிசம்பரில் ஆட்சிக்கு வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசு அந்தச் சட்டத்தை நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் ரத்துச் செய்திருந்தது.

தற்போதைய நிலையில் ஊடகம் ஒன்றில் வெளியாகும் செய்தியால் அல்லது தகவலால் தாம் முறையற்ற விதத்தில் அவதூறுக்கு உள்ளாகியிருக்கின்றார் எனக் கருதும் ஒருவர் அதற்காக சிவில் வழக்குத் தொடர்ந்து நஷ்டத்துக்கான நிவாரணம் பெறமுடியும்.

ஆனால் மீண்டும் கிரிமினல் குற்ற அவதூறுச் சட்டம் கொண்டு வரப்படுமானால், சிவில் - கிரிமினல் ஆகிய இரு வழக்குகளையும் ஏக காலத்தில் தொடர வாய்ப்பு ஏற்படும் எனக் கூறப்படுகின்றது.

அரசின் போக்குக்கு அடங்க மறுத்துச் செயற்படும் ஊடகவியலாளர்களை அவர்களுக்கு எதிராகக் கிரிமினல் குற்ற அவதூறுச் சட்டம் பாயும் என்ற பூச்சாண்டியைக் காட்டி அடக்கிவிடலாம் என அரசுத் தலைமை கருதுகின்றது என்றும் கூறப்படுகின்றது.

ஊடகத்துறையின் முக்கிய இரு பிரதிநிதிகளை அரச உயர் மட்டத்தில் உள்ள மூத்த அதிகாரி ஒருவர் அண்மையில் சந்தித்து கடும் தொனியில் வைதபோது, விரைவில் கிரிமினல் குற்ற அவதூறுச் சட்டம் கொண்டு வரப்படும் என்ற அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டதாக அறியவந்தது. (சி)

# வெள்ளிரும்பினாலான ரி-56 இலங்கையில் கண்டுபிடிப்பு

## அல் குவைதாவுக்குத் தொடர்பா?

கொழும்பு,மே31

திருகோணமலை மாவட்டம், ஹொறவப்பொத்தானைப் பகுதியில் உள்ள ஓரிடத்தில் முஸ்லிம் நபர் ஒருவரிடமிருந்து - இலங்கையில் முதல் தடவையாக - வெள்ளிரும்பினாலான (Stainless Steelஇல் தயாரிக்கப்பட்ட) ரி - 56 ரகத் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றமை இலங்கைப் பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக அறியவருகின்றது.

விடுதலைப் புலிகளிடமோ, பாதாள உலகக் குழுக்களிடமோ, அரசுப் படைகளிடமோ இல்லாத ஒரு ரகத்தில் ரி - 56 ரகத் துப்பாக்கி முதல் தடவையாக - அதுவும் முஸ்லிம் ஒருவரிடமிருந்து - மீட்கப்பட்டிருக்கின்றமை பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்திருக்கின்றதாம்.

இந்த நபருக்கும் 'அல் - குவைதா' போன்ற சர்வதேச இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்களுக்கும் இடையில் ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா, அதன்மூலம் துருப்பிடிக்காத - உயர் ரகத்திலான - வெள்ளிரும்பில் தயாரிக்கப்பட்ட - இந்த விசேட ரி - 56 ரகத் துப்பாக்கி நாட்டுக்குள் கடத்தி வரப்பட்டதா என்பன போன்ற கோணத்தில் பாதுகாப்புத் தரப்பினர் தமது புலன் விசாரணைகளை முடுக்கி விட்டிருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

தமக்குக் கிடைத்த விசேட உளவுத் தகவல் ஒன்றை அடுத்து திருகோணமலையில் இருந்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தலைமையில் சென்ற விசேட புலனாய்வுக்குழு ஒன்று கடந்த புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் ஹொறவப்பொத்தானைப் பகுதியில் வைத்து மேற்படி சந்தேக நபரை அந்த ஆயுதத்துடன் மடக்கியது என்றும் -

அச்சந்தேக நபர் திருகோணமலைத் தலைமையகப் பொலிஸாரினால் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என்றும் -

பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (சி)

# மின் கட்டணம், எரிவாயு விலை அடுத்த வாரத்தில் அதிகரிக்கும்

## முற்கூட்டியே மக்களுக்கு ஐ.தே.கட்சி தகவல்

கொழும்பு,மே31

எரிபொருள்களின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து ரயில் கட்டணம் 50 வீதத்தாலும், மின் கட்டணம் 45 வீதத்தாலும் மற்றும் சமையல் எரிவாயுக்களின் விலை 125 ரூபாவாலும் அடுத்த வாரமளவில் அதிகரிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஒரு லீற்றர் பெற்றோல் மூலம் அரசுக்கு 68 ரூபா இலாபம் கிடைக்கின்றது என்று தெரிவித்திருக்கும் ஐ.தே. கட்சி, அந்த இலாபத்தை அரசு குறைத்தால் பெற்றோலின் விலையைக் கணிசமான அளவு கட்டுப்படுத்தமுடியும் என்றும் கூறியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் எம்.பியான ரவி கருணாநாயக்கவே இத்தகவலைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

எரிபொருள்களின விலையைக் கண்மூடித்தனமாக உயர்த்தியதன் காரணமாக இந்த அரசு தேசத்துரோகியாக மாறியுள்ளது.

எரிபொருள்களின் இந்த விலை அதிகரிப்பைத் தொடர்ந்து அவற்றுடன் தொடர்புபட்ட பலதரப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்களும் உயர்த்தப்படவுள்ளன.

முதல் கட்டமாக பஸ் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. அடுத்ததாக ரயில் கட்டணம் 50 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.

இலங்கை மின்சார சபைக்கு எரிபொருள் மானியம் வழங்காவிட்டால் மின் கட்டணத்தை 45 வீதத்தால் உயர்த்தவேண்டிவரும் என்று இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது. அடுத்த வாரமளவில் மின் கட்டணம் உயரப்போவதை நாம் பார்க்கலாம்.

அரசு தேவையற்ற வரிகளைக் குறைத்தால் எரிபொருள்களின் விலையை நிச்சயம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

ஆனால், அரசிடம் அவ்வாறான திட்டம் எதுவும் கிடையாது. அரசின் இந்தப் பலவீனமான நிர்வாகத்திற்கு எதிராக எமது மக்கள் போராட்டம் தொடரும் - என்றார். (சி)

# நூறு நாடகங்களில்...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி...)

### எந்தையும் தாயும்

மேடையேற்றுவற்குரிய சிறந்த அம்சங்களைக் கொண்டு விளங்குகின்றது. யுத்தத்தால் ஏற்பட்ட குடும்பப் பாதிப்பை விளக்குகிறது. மற்றையது வடகிழக்கில் நிம்மதியற்ற வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் முன்னைய கனவுடனான யுத்தத்தின் பின்பு வாழும் வயோதிபரின் கதையெனலாம்.

யுத்தத்தின் முன்பான வாழ்க்கை எவ்வளவு அழகானதாக இருந்ததென்பதையும் யுத்தம் எவ்வாறு வாழ்க்கையை சீர்குலைத் துள்ளது என்பதையும் உணர்த்துகின்றது. பதினொரு பிள்ளைகள் வெளிநாடு சென்ற பின் தனிமையில் வாழும் சங்கரப்பிள்ளை என்ற பாத்திரத்தின் கருத்துருவாக்கமானது புதுமையானதாகும்.

### வேள்வித் தீ

மிகச் சிறந்த நாடக உத்தி நிறைந்த படைப்பு. வாசுகி என்ற பாத்திரம் இறுதிவரை அதில் நாடகத்தன்மை சிறப்பாகக் கை யாளப்பட்டுள்ளது. பரீட்சார்த்த நிகழ்வுகளும்-கைவந்த நாடகக் கலைஞரின் முயற்சி என்றும் கூறலாம்.

தான் தாயாவதை கணவனுக்கு கூற இருந்தவேளையில் படைச் சிப்பாயால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின் றாள்.

சிறிரங்கன்- வாசுகி உளவியல் முரண்பாடு குறிப்பிடக்கூடியதாகும். தமிழ் சமூக ஐதீகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒதல்லோ டெஸ்டிமோனா பாணியில் இறுதி உரையாடல் அமைந்துள்ளது. மூன்றிலும் இதில்தான் சிறந்த உத்தி கையாளப்பட்டுள்ளது.

யுத்தம் உச்சக்கட்டத்தில் நடந்த வேளை யில் குழந்தை அந்தச் சமூகத்தில் வாழ்ந்தவர். யுத்த எதிரொலியை காண முடிகிறது. பிரசாரத்தன்மையுடையதாக இல்லை. நூறு நாடகத்தில் காணக் கூடியதை இவரது ஒரு நாடகத்தில் காணலாம்.

இனப்பாகுபாடு என்பது பொருத்தமான தல்ல. பிரச்சினை என்னவென்றால் மொழி தெரியாத பிரச்சினை மட்டுமே உள்ளது. அவர் ஒரு சிறந்த நாடகக் கலைஞர் என நான் கருதுகின்றேன். அந்த நாடகப் பணிக்கு 'சரண்தாஸ்' என்ற நாடகப் பிரதியை கௌரவமாக அவருக்குச் சமர்ப்பணம் செய்கிறேன். (302)

# வெள்ளைப் பச்சையும், சிவப்பு நாட்டரிசியும் திங்கள் முதல் கிலோ 60 ரூபாவுக்கு விற்பனை!

வெள்ளைப் பச்சை அரிசியும் சிவப்பு நாட்டரிசியையும் கிலோ 60 ரூபாவிற்கு விற்பனை செய்யத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசுக்குச் சொந்தமான ச.தொ.ச. மற்றும் பலநோக்குக் கூட்டுறவு நிலையங்களில் மாத்திரம் அடுத்த திங்கட்கிழமை முதல் மேற்படி இரண்டு அரிசி வகைகளும் 60 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஒரு கிலோ அரிசியின் விலையை நாம் 70 ரூபாவாக நிர்ணயித்தோம். வெசாக் முடிந்ததும் அரிசியின் விலை உயரும் என்று சிலர் கூறினார். ஒருபோதும் அந்த விலை அதிகரிக்கப்படமாட்டாது.

இப்போது நாம் அடுத்த திங்கட்கிழமை முதல் ஒரு கிலோ சிவப்பு நாட்டரிசியையும் வெள்ளைப் பச்சை அரிசியையும் 60 ரூபாவிற்கு விற்பனைசெய்யத் திட்டமிட்டுள்ளோம்.

பலநோக்குக் கூட்டுறவு நிலையங்களிலும் ச.தொ.சவிலும் இந்த அரிசி வகைகள் விற்கப்படும். விலைவாசியை மெல்ல மெல்லக் குறைக்கும் நோக்கிலேயே இத்திட்டம் கொண்டுவரப்படுகிறது.

பால்மா வகைகளின் விலையை அதிகரிக்க பால்மா இறக்குமதியாளர்கள் எம்மிடம் அனுமதி கேட்டனர். நாம் அதற்கு அனுமதி வழங்கவில்லை. வழங்கவும்மாட்டோம். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# விசேட சலுகைக்காக சர்வதேசத்தை இறைஞ்சுகின்றது இலங்கை

போரியல் போக்கிலும் தமிழருக்கு எதிரான இராணுவக் கெடுபிடித் தீவிரத்திலும் ஒரேயடியாக உறுதியாக நிற்கும் தென்னிலங்கை அரசுக்கு இப்போதுதான் உண்மை மெல்ல மெல்லச் சுடத் தொடங்கியிருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணும் தனது வெறிப்போக்குக்கு சர்வதேசம் அங்கீகாரம் தராது என்பது இப்போதுதான் கொழும்புக்குப் புரிய ஆரம்பித்திருக்கின்றது.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக மோசமான மனித உரிமை மீறல்களைத் தூண்டி, முன்னெடுத்து, மேற்கொண்டு வரும் அரசின் செயற்போக்குக்கு எதிராக உலகின் சீற்றம் வெளிப்படத் தொடங்கிவிட்டது.

ஏற்கனவே, உலகில் மனித உரிமைகள் பேணலுக்கான உயர் காவல் கட்டமைப்பு என்று வர்ணிக்கப்படும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்புரிமையிலிருந்து இலங்கை தூக்கி வீசப்பட்டு விட்டது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டு, மிதிக்கப்படுவதை சகிக்க முடியாத அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட மேற்குலகு இலங்கைக்கான பல்வேறு நிதித் திட்டங்களை ஏற்கனவே, நிறுத்திவிட்டன.

இப்போது இலங்கைப் பொருள்களின் ஏற்றுமதிக்கான விசேட 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையை (General System of Preference) நீக்குவது குறித்து மேற்குலகு தீவிரமாக ஆலோசிக்கத் தொடங்கியுள்ளது.

அப்படி அந்தச் சலுகையை நீக்குவதன் மூலம் பல நூறாயிரம் அப்பாவிகளின் வயிற்றில் அடித்து விடாதீர்கள் என்று வாஷிங்டனில் போய் இப்போது கெஞ்சுகின்றார் கொழும்பு அரசின் மூத்த அமைச்சர்களுள் ஒருவரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

''பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடும் ஒரு ஜனநாயக நாட்டின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளுங்கள். எங்களின் மூலவளங்களை வெட்டிக் குறைப்பீர்களானால் வறுமைதான் இலங்கையில் தலைவிரித்தாடும்.'' - என்றும் அங்கு இறைஞ்சியிருக்கிறார் அவர்.

நல்லது. பேராசிரியர் பீரிஸ் அவர்களே! இலங்கையில் ஓரினத்துக்கு எதிராக - சிறுபான்மையினரான தமிழர்களுக்கு எதிராக - உங்களின் 'ஜனநாயக' அரசு கட்டவிழ்த்து விட்டிருக்கும் மோசமான - மிகக் கொடூரமான - கொலைவெறிப் போக்கைக் கவனிக்காமல் புறம் தள்ளிவிட்டு, இலங்கை அரசுக்கு சகல சலுகைகளையும், வழிகளையும், உதவிகளையும், ஒத்தாசைகளையும் மேற்குலகம் தொடரவேண்டும் என எதிர்பார்க்கின்றீர்களா?

ஜனநாயகத்தின் பெயரால் ஓர் இராணுவ அடக்கு முறை ஆட்சி தனது பேரினவாத மேலாண்மை எதேச்சாதிகாரத்தை மக்கள் மீது - அதுவும் ஒரு சிறுபான்மை இனம் மீது கண்மூடித்தனமாகக் கட்டவிழ்த்து விடுவதைக் கண்டு கொள்ளாமல் அதன் அராஜகங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் விதத்தில் சர்வதேசம் செயற்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா?

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமேயில்லை. அமைதி வழியிலான - பேச்சு, கலந்துரையாடல் முறையிலான - சமாதானத் தீர்வே ஒரே வழி என்பதை அமெரிக்காவும் ஏனைய சர்வதேச நாடுகளும் உங்கள் அரசுக்கும் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கும் திரும்பத் திரும்ப பகிரங்கமாக வலியுறுத்தும் போது, அதை அப்பட்டமாகவும் வெளிப்படையாகவும் உதாசீனப்படுத்திப் புறக்கணித்து விட்டு, உங்களின் அரசுத் தலைவர் தமது இராணுவ நடவடிக்கைத் திட்டம் நிறுத்தப்படமாட்டாது எனப் பகிரங்கமாக அறிவிக்கின்றார். வெளிப் பேச்சுக்கு அரசியல் தீர்வு குறித்து உதட்டளவில் பேசும் உங்கள் அரசின் செயற்போக்கையும் மேற்குலகின் கருத்தைப் புறந்தள்ளும் அதன் மேலாண்மைத் தனத்தையும் கவனிக்காமல், தொடர்ந்து உங்கள் அரசுக்கு உதவிகளை வழங்கி, அதன் அத்துமீறல்களுக்கு மேற்குலகு உதவியும் ஒத்தாசையும் அங்கீகாரமும் வழங்கவேண்டும் என எதிர்பார்க்கின்றீர்களா பேராசிரியர் அவர்களே.....?

ஜனநாயகத்தின் பெயரால் - சட்ட ரீதியான அரசின் நாமத்தால் - இறைமையுள்ள ஓர் நாட்டுக் கட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் ஒரு தேசத்தின் சார்பில் - செயற்படுவதற்கான அடிப்படைத் தகுதிகளை வெளிப்படுத்துவது இலங்கை போன்ற ஒரு நாட்டு அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உங்கள்தரப்பின் கடமையல்லவா? அதை நீங்களும் உங்கள் அரசுத் தரப்பினரும் நிறைவு செய்துள்ளீர்களா என்பதை ஒரு தடவை சுய பரிசோதனை செய்து பார்த்துக் கொண்டீர்களா?

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்புரிமையிலிருந்து சர்வதேசம் உங்களை நிராகரித்து இருபத்திநான்கு மணி நேரம் கடப்பதற்கு முன்னரே, அந்தத் தீர்ப்பை நியாயப்படுத்தும் விதத்தில் கொழும்பில் பிரபல பத்திரிகையாளர் ஒருவர் கடத்தப்பட்டு, நையப் புடைக்கப்பட்டு, கடுமையாக அச்சுறுத்தப்பட்டிருக்கின்றார். அந்த அதிகார வர்க்க அத்துமீறலுக்கு அமைதி முறையில் ஆட்சேபம் தெரிவித்த ஊடகப் பிரதிநிதிகளும் பாதுகாப்பு உயரதிகாரி களால் மிரட்டப்பட்டிருக்கின்றனர்.

இத்தகைய தொடர் அராஜகங்களின் சூத்திரதாரிகளும், பின்னணியில் இயங்கும் அதிகார வர்க்கமும், அதன் அரூபக் கரங்களும் எவை என்பது நாடறிந்த பரகசியம். ஆனால் இந்த நாட்டில் இந்த அத்துமீறல்களுக்கு எல்லாம் யார் மீதும் நடவடிக்கை இல்லை. யாரும் பொறுப்புக் கூறவும் தேவையில்லை என்ற அலட்சிய ஆட்சி.

அரசு சார்புப் பணி என்ற பெயரில் நடக்கும் மோசமான மனித உரிமை மீறல்களுக்கு யார் மீதும் குற்றம் சுமத்தப்படுவதில்லை. அத்தகைய குற்றங்களின் சூத்திரதாரிகளுக்கு சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களிக்கும் விசேட கலாசாரம் இந்தத் தேசத்தின் தனிச்சிறப்பு.

இத்தகைய கொடூரப் போக்கிலிருந்து தன்னைத் திருத்திக் கொள்ளவே விரும்பாத திமிர்த்தனம் மிக்க ஒரு நாட்டுக்கு - பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் போன்ற எத்தனை புத்திஜீவிகள் கெஞ்சிக் கேட்டாலும் - சர்வதேசத்தின் சலுகைகளைப் பெறுவதற்கான உரிமையோ, தகுதியோ, பாத்தியமோ கிடையாது என்பதுதான் நீதி.

## கிழக்கு மாகாணசபை

# முஸ்லிம்களின் அடையாளத்தை உறுதிசெய்யாது; தமிழருடன் முரண்பாடுகளையே தோற்றுவிக்கும்

## அம்பாறை மாவட்ட முஸ்லிம் அமைப்பு அறிக்கை

அம்பாறை மே31

கிழக்கு மாகாணசபை, முஸ்லிம்களின் இருப்பையோ அடையாளத்தையோ உறுதிப்படுத்தும் சபையாக இருக்கப்போவதில்லை. மாறாக தமிழ், முஸ்லிம் இனங்களிடையே முறுகல்களையும் முரண்பாடுகளையும் தோற்றுவித்து அதன்மூலம் பேரினசக்திகள் தமது நோக்குகளை எண்ணங்களை ஈடேறவைக்கும் சபையாகவே இயங்கப்போகிறது என்பதை முதலாவது சபையே தெளிவுபடுத்தியிருக்கிறது.

இவ்வாறு அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் விசனமும், கவலையும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சார்பில் அதன் தலைவர் மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா இந்த அறிக்கையை விடுத்துள்ளார்.

தலைவர் மௌலவி ஆதம்பாவா விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தொடர்ந்து கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

பிரயாணிகளிடம் வழிப்பறிப்புகள் முஸ்லிம் நகரமான காத்தான்குடியில் வைத்து தமிழர் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை, இக்கொலைச் சம்பவத்தையடுத்து கொலைகாரர்களை இனம் காணும் முன்பே தமிழ்க் கிராமங்களை அண்டிய முஸ்லிம் கிராமமான காங்கேயனோடையில் முஸ்லிம்கள் மூவர் சுட்டுக்கொல்லப்பட்டதும் பலர் வெட்டிக் காயப்படுத்தப்பட்டமையும் ஏறாவூரில் முஸ்லிம்கள் இருவர் கடத்தப்பட்டிருப்பதும் அதற்குமுன் கடத்தப்பட்ட இருவர் விடுவிக்கப்பட்டிருப்பதும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

இவ்வாறான நிகழ்வுகள் கிழக்கு மண்ணில் ஒற்றுமையாக வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் குழப்பங்களையும் பிரிவினைகளையும் ஏற்படுத்த விளையும் சில சக்திகளின் திட்டமிட்டசெயலாகும்.

கிழக்கு மண்ணைப் பொறுத்தவரை இரண்டு இனங்களும் ஒற்றுமையாகவும் பரஸ்பரம் புரிந்துணர்வுடனும் வாழ்வதன் மூலமே நிம்மதியாக வாழமுடியும்.

எனவே, ஒற்றுமையாக வாழவேண்டிய இனங்கள் மத்தியில் குழப்ப நிலையை ஏற்படுத்தி அதில் குளிர்காயவும் இலாபம் பெறவும் முயலும் சக்திகள் அனைத்தையும் தோற்கடிக்கும் பணியில் கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் கைகோர்க்க வேண்டும்.

முதலமைச்சர் பதவி கிடைக்குமென்று எதிர்பார்த்த முஸ்லிம் சமூகம் ஏமாந்து பின்னர் கேட்ட இரண்டாம் நிலை அமைச்சுப் பதவியும் மறுக்கப்பட்டு மூன்றாம் நிலைப் பதவியே வழங்கப்பட்டு இரந்து வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

### இரு சபைகள்

இந்நிலையில் கிழக்கில் வாழும் முஸ்லிம்களும் தமிழ் மக்களும் தங்களைத் தாங்களே நிருவகிக்கும் வகையில் அதிகாரப் பகிர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

இது விடயத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி ஆராயும் சர்வகட்சி மாநாடு முடிவெடுக்கவேண்டும்.

இரு இனங்களிலிருந்தும் இரு முதலமைச்சர்கள் தெரிவுசெய்யப்படவேண்டும். ஓரினம் மற்ற இனத்தை ஆளமுற்படும்போதே பிரச்சினைகள் தோற்றம்பெறுகின்றன.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

# புனர்வாழ்வு புனர்நிர்மாண செயற்பாடுகளுக்கான மணல் விநியோகம் தொடர்பான அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 31

புனர்வாழ்வு புனர்நிர்மாண செயற்பாடுகளுக்கான மணல் விநியோகம் தொடர்பான நடைமுறைகள் குறித்து யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

▸▸ யாழ்.மாவட்ட செயலகத்தில் செயற்படும் மணல் உத்தரவுப் பத்திரம் வழங்கும் பிரிவில் மணல் உத்தரவு வழங்கலுக்கான விண்ணப்பங்கள், கொடுப்பனவுகள் அரச திணைக்கள வேலை நாள்களில் முற்பகல் 10.30 மணிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

▸▸ தற்போது கட்டுமாணப் பணிகளுக்கான மணல் தேவை அதிகரித்துள்ளமையாலும் ஒரு குறிப்பிட்ட அளவு மணலே குடத்தனையில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதனாலும் பின்வரும் முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகளுக்கு மணல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியில் மேற்கொள்ளப்படும வீட்டுத் திட்டங்கள் மற்றும் அரச திணைக்கள பொதுக் கட்டுமாணப் பணிகள் .

▸▸ மணல் உத்தரவுப் பத்திரத்துக்கான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரால் நேரடியாக கையளிக்கப் படவேண்டும். அவ்வாறு சம்பந்தப்பட்ட தரப்பினரால் நேரடியாக சமர்பிக்க முடியாதவிடத்து அவரினால் எழுத்து மூலமாக அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலம் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படலாம். இது தொடர்பில் தனிப்பட்ட பயனாளிகளின் எழுத்துமூல அங்கீகாரம் அப்பகுதி கிராம அலுவலரால் சிபார்சுசெய்யப்படவேண்டும்.

▸▸ ஏற்கனவே வழங்கப்பட்ட மணல் உத்தரவுப் பத்திரத்தில் மாற்றங்கள் செய்யவேண்டியிருப்பின் தேவைப்படும் மாற்றங்களுக்கான கோரிக்கை எழுத்து மூலம் விண்ணப்பதாரியினால் கோரப்படவேண்டும். இம்மாற்றங்கள் முற்பகல் 11 மணிக்கு பிற்பாடு சமபந்தப்பட்ட கிளையினரால் செய்து கொடுக்கப்படும்.

▸▸ மணல் விநியோக அனுமதிப்பத் திரங்களின் செல்லுபடிக்காலம் ஒரு மாத காலப்பகுதிக்கு வழங்கப்படுவதால் சம்பந்தப்பட்ட பயனாளிகள் லொறி உரிமையாளர்கள் சாரதிகளைத் தொடர்புகொண்டு அனுமதிக்கப்பட்ட கால எல்லைக்கு அனுமதிக்கப்பட்ட மணல் அளவை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

▸▸ மணல் உத்தரவுப் பத்திரத்துக்குரிய விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள சகல விவரங்களும் உரிய முறையில் தெளிவாகப் பூரணப்படுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்/பிரதேச செயலர்/ உதவி அரசாங்க அதிபர் அல்லது திணைக்கள தலைவர்களினால் தவறாது சிபார்சு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் எந்தத் திட்ட வேலைக்காக மணல் தேவையோ அத்திட்டத்தின் பெயர், விண்ணப்பப் படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடப் படவேண்டும்.

▸▸ வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள முழு அளவு மணலும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் குறிப்பிட்ட அனுமதிப்பத்திர பயனாளி முழு மணலும் பெற்றுக்கொள்ளப்பட்டதாக அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டு குறித்த அனுமதிப்பத்திரத்தை கிராம சேவையாளர் ஊடாக அல்லது நேரடியாகச் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளருக்கு / உதவி அரசாங்க அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

1.06.2008 தொடக்கம் பின்வரும் ஒழுங்கின்படி பயனாளிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள் ளப்படும்.

திங்கள் : யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, சங்கானை, காரைநகர், பிரதேச செயலர்/ உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள்.

செவ்வாய்: தெல்லிப்பழை, உடுவில், நல்லூர், பிரதேச செயலர் பிரிவுகள்.

புதன்: வேலணை, கோப்பாய், பிரதேச செயலர்/உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள்.

வியாழன்: சாவகச்சேரி, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகள்.

வெள்ளி: பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, பிரதேச செயலர்/ உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள். (202)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 19 | 01.06.2008 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | துவாதசி மு.ப 8.59 வரை |
| நட்சத்திரம் : | அச்சுவினி பி.ப. 12.59 வரை |
| சுபநேரம் : | 08.52 - 10.22 |
| இராகுகாலம் : | 04.22 - 05.52 |

## கதியேதுமில்லை உனையன்றி சிட்டிபுரத்துத் தாயே!

சித்திரத் தேரேறி உலாவரும் தாயே
எத்திசையும் அருள்சுரந்து ஆதரிப் பாயே
மத்தியிலே உறைந்திருந்து வரணியம் பதியை
பத்திரமாய் என்றென்றும் காத்தருளும் தாயே
உன்னையே கதியென்று பழிகிடந்தோம் தாயே
எல்லையிலா அருள்சொரிந்த அம்பிகையே தாயே
பிள்ளைகளாய் எங்களை நீ தத்துமெடுத் தாயே
பின்னுமேன் நெடுந்துயரம் எங்களுக்குத் தாயே!

★ ★ ★ ★ ★ ★ ★

வளம்மிகுநல் புலங்கள் நிறைந்திருந்த தாலே
வாழ்த்திவர வேற்றே வயிறுமாற்றி நாளும்
வந்தோரும் வாழ நாமும் மகிழவைத்தாய் தாயே
வளமிழந்து கிலிகொள் வாழ்வைமாற்றி நாம்
மீளஇழந்த தெல்லாம் பெறஅருளு வாயே
மீள எமக்கு மார்க்கம் உன்தாளன்றி வேறேதம்மா
நாளும் உன்தனையே சிட்டிபுரத் தாயே
தாள்பணிந்து ஏத்துகின்றோம் அம்மா அருள்வாயே

வரணிதரன்

(இன்று வரணி சிட்டிபுரத்து அம்மன் ஆலயத் தேர்த் திருவிழா. பக்தனின் ஆதங்கம் இங்கு கவிதை வடிவில்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச இந்துமதக் குருமார் ஒன்றியத்தின்
## மாதாந்தக் கருத்தரங்கு

காலம்: 01.06.2008 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணி

இடம்: தலைமைச் செயலகம், குருகுலம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

தலைவர்: பிரம்மஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள் - அத்தியடி

வாழ்த்துரை: சிவஸ்ரீ சா.சோமதேவக் குருக்கள் - நீர்வேலி

கருத்துரை: சிவஸ்ரீ மதுசூதனக் குருக்கள் - சித்தன்கேணி

விடயம்: "கலாகர்ஷணம்"

அனைத்து அந்தண சிவாச்சாரியார்கள், மாணவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: எரிபொருள் விலையேற்றம் காரணமாக இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.**

விளம்பர அனுசரணை: வயலூரர் முருகன் தேவஸ்தானம் வல்வை.

(74891)

## துயர் பகிர்கின்றோம்



எமது செயலகத்தில் நீண்டகாலமாக பிரதேச செயலராக கடமையாற்றியவரும் யாழ்.மாவட்ட முன்னாள் மேலதிக அரச அதிபருமான

அமரர்

**துரையப்பா வைத்திலிங்கம்**

அவர்கள் 28.05.2008 அன்று இறைபதம் எய்தியமையிட்டு துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம் நலன்புரிச் சங்க உறுப்பினர்களும்,
**பிரதேச செயலகம், வலி.மேற்கு, சங்கானை.**

(74878)

## 10ஆம் ஆண்டு நினைவு

| தவப்பேறு | சிவப்பேறு |
|---|---|
| 08 | 23 |
| 08 | 05 |
| 1932 | 1998 |



**அமரர் சுப்பையா ஆறுமுகராசா**

வாழ்க்கையை மறந்து வாழும் நான்
உங்களை நான் எப்படி மறந்து வாழ்வேன்
பத்து ஆண்டுகள் மறைந்து போனாலும்
பத்து நாள்கள் மறைந்தாற்போல் உள்ளது
உங்கள் நினைவால் தவிக்கும்
அன்பு மனைவி நான்.

பிரம்படிலேன்,
கொக்குவில்.

அன்பு மனைவி:
**ஆ.சரோஜினி**

(74888)

### சமூகத்தில் வன்முறைகள்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சிறு வயதில் தாய்ப்பால் குடித்தலில் உள்ள இடையூறுகள் உளவியலில் பிற்காலத்தில் புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு ஆளாக ஏதுவாக அமைகின்றது. இத்தகையவர்கள் விசேட கவனம் எடுப்பதால் இதனைத் தவிர்க்கலாம்.

புகைத்தலை விலக்கினால் 48 மணித்தியாலத்தில் குருதியில் பெரும்பாலான காபன் மொனோட்சைட்டும் நிக்கொட்டினும் இல்லாதுபோகும். விலத்தலை மேற்கொள்ளும் போது திடசங்கற்பம், திட்டமிடல், ஆதரவு என்பன தேவை. இதனை உடனடியாகவோ படிப்படியாகவோ மேற்கொள்ளலாம். விலத்தல் அறிகுறிகள் முதல் கிழமையில் அதிகமாக இருக்கும். 3-4 கிழமைகளில் முற்றாக நின்றுவிடும். எனவே இக்காலப் பகுதியில் திடசங்கற்பத்துடன் இருப்பதால் புகைத்தலில் இருந்து முற்றாக விடுபடலாம். புகைத்தலை விலத்தும்போது, மீளப் புகைத்தலுக்கு ஆளாகும் நிலை, மன அவா ஏற்படும்போதும், விலத்தல் அறிகுறி ஏற்படும்போதும், முன்னர் புகைத்தல் சந்தர்ப்பங்கள் மீளவரும் போதும் ஏற்படும். இது ஆறு நிமிடங்களுக்கு நீடிக்கும். இதில் 2-3 நிமிடம் வரை கடினமானதாக இருக்கும். ஆனால் அந்நேரம் கடந்தால் அவ் அவா நீங்கிவிடும். சிலருக்கு புகைப்பெட்டி அருகில் இருக்கவேண்டும் அன்றேல் பதகளிப்பு ஏற்படும். இவர்களுக்கு விலத்தலை மேற்கொள்ளும்போது புகைப்பெட்டியை வலிமையாகக் கட்டி வைப்பதால் அவா கழியும்வரை பெட்டியை திறக்காது நேரத்தைக் கடத்தலாம்.

புகைப்பிடிப்பவர்களில் விலத்தல் அறிகுறிகளாக தலைச்சுற்று 1-2 நாள்களுக்கு இருக்கும், களைப்புக் காணப்படும். இருமல், நெஞ்சிறுக்கம், நித்திரைக்குழப்பம், என்பன முதல் ஒரு கிழமைக்கு காணப்படும். மலச்சிக்கல் 3-4 கிழமைகளுக்கு காணப்படலாம். பழவகைகளை உட்கொள்வதால் இதனை தவிர்க்கலாம். மேலும் பசி, சினத்தல், கிரகிக்கும் தன்மை குறைதல் என்பன ஏற்படலாம். இதனால் மீளவும் புகை பிடிக்க அவாவுறுவர். இந்த நிலையில் எதிர்ப்புபொறி முறையால் மீண்டும் புகைப்பிடித்தலைத் தவிர்க்கலாம். அத்தகைய சந்தர்ப் பங்களில் பாராட்டி வெகுமதியும் அளிக்கலாம்.

வர்த்தகர்கள் புகைத்தலை ஊக்குவிக்கும் வகையில் செயற்படக்கூடாது. மேலும் *"புகைத்தல் உடல் நலத்திற் கேடாகலாம்"* என்ற விளம்பரத்தால் தம்மைத் தாமே அழிக்கு மனநிலையில் உள்ளவர்கள் அதனை மேலும் மேலும் பாவிப்பர். இது ஒரு எதிர்மறையான விளைவாகும்.

கிராம மட்டத்தில், சனசமூக நிலையங்கள் புகைத்தல், விலத்தல் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். மற்றும் வேலைத்தளங்கள், தேநீர்ச் சாலைகள், களியாட்ட இடங்கள் என்பன விசேடமாக விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டிய இடங்களாகும்.

புகைத்தல் தடைச் சட்டம் ஒரு நாட்டிற்கு இன்றியமையாதது. ஏனெனில் ஆரோக்கியமான பிரஜைகளை உருவாக்கவும் சமூக வன்முறைகளைக் கட்டுப்படுத்தவும், பொருளாதார நிலையை மேம்படுத்தவும், மிக மிக அத்தியாவசியமானது.

*

### இரசாயனவியல் மாணவர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், மே.31

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் இவ்வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் விஞ்ஞான பாடத்தில் இரசாயனவியல் கற்கும் மாணவர்களுக்கு செயலமர்வு ஒன்றை நடத்தவுள்ளது.

இச் செயலமர்வு எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(202)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## தொழிலாளர் கல்வி டிப்ளோமா மீள் பரீட்சை

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழிலாளர் கல்வி அலகில் தொழிலாளர் கல்வியில் 'டிப்ளோமா' கற்கை நெறியை மேற்கொண்டு (2000- 2001, 2001- 2002) அக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்யாத மாணவர்கள், அவர்கள் மீளத் தோற்ற வேண்டிய பாடம் குறித்த விவரங்களை இரண்டு வார காலத்திற்குள் அலுவலக நாள்களில் காலை 8.30மணி முதல் மாலை 4.00 மணி வரை தொழிலாளர் கல்வி அலகில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இப்பரீட்சார்த்திகளுக்கான மீள் பரீட்சை குறித்த விவரங்கள் பின்னர் அறியத் தரப்படும்.*

*29.05.2008* (சி/553044) **பதிவாளர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 | 01 |
| 05 | 05 |
| 1947 | 2008 |



**அமரர் பாக்கியநாதன் கமலாதேவி**

தரணியில் எமையாளாக்கிய தாயே!
தவிக்க விட்டுச் சென்றீர்களே!
காலனவன் கருணையின்றி உங்கள்
ஆவி கொண்டு போனானே!
காவிரியாய் எங்கள் துன்பம் பெருகுகின்றதே

கடந்த 01.05.2008 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தாயின் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (31.05.2008) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்றன. எமது தாயின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் அனைத்து அன்பு உள்ளங்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முதலாம் கட்டை,
தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
**பிள்ளைகள்.**

(74869)

## கேள்வி அறிவித்தல்

01. கீழ்வரும் வேலைகளுக்கான மூடிய கேள்விகள் அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல. | ஒப்பந்தக் குறியீட்டு இல. | ஒப்பந்த விவரம் | இக்ராட் தரம் | கேள்விப் பிணை | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01. | JF/BD/GA/VTC/01/2008 | தொழிற் பயிற்சி நிலையம் நிர்மாணம் சண்டிலிப்பாய். கட்டம்-I | M7/C8 | 55,000.00 | 1,000.00 |
| 02. | JF/BD/GA/VTC/02/2008 | தொழிற் பயிற்சி நிலையம் நிர்மாணம் சுன்னாகம். கட்டம்-II | M7/C8 | 55,000.00 | 1,000.00 |

02. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்விதாரர்களும் கொண்டிருக்க வேண்டும்.
   I. மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
   II. ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.
   IV. ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக்க வேண்டும்.
   V. கேள்விதாரர் VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவு செய்யப்படாமைக்கான கடிதத்தை ஆணையாளர், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.
03. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நேரத்தில் நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா) யாழ்ப்பாணம் (தொ.இல.021- 222 2634) பரிசீலிக்க முடியும்.
04. கேள்வி ஆவணங்களை 02.06.2008 தொடக்கம் 17.06.2008 பி.ப.1 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணம் (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா), யாழ்பாணத்தில் செலுத்தி நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
05. மூடிய கேள்விகளை தலைவர், மாவட்ட கேள்விச்சபை , மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 19.06.2008 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டும். உடனடியாக கேள்வி திறக்கப்படும். இந்நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமூகமளிக்க முடியும்.
06. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

க.கணேஷ்,
தலைவர்,
மாவட்ட கேள்விச் சபை/ அரசாங்க அதிபர்.

மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/553042)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

## "நலமுடன் ஒரு குருக்ஷேத்திரம்"

இறுவட்டு வெளியீடு

காலம்: 01.06.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி.

இடம்: கைலாசபதி கலையரங்கம் யாழ். பல்கலைக்கழகம்.

பிரவேசம் - இலவசம்

பிரதம விருந்தினர்:
உயர்திரு. K.கணேஷ்
அரச அதிபர், யாழ். மாவட்டம்

வெளியீடு:
Dr. S. சிவன்சுதன், விடுதி 04, 08, யாழ்.போதனா வைத்தியசாலை.
குழு IV, 26 ஆம் அணி, யாழ். மருத்துவபீடம்.

உதயன் ஊடக அனுசரணையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர் தேவா படுகொலைக்கு சர்வதேச அமைப்புகள் பல கண்டனம்

## பக்கச் சார்பற்ற விசாரணைக்கு வற்புறுத்தல்

கொழும்பு, மே 31

சக்தி, சிரச, எம்.ரி.வி. ஆகிய தொலைக் காட்சி வலையமைப்புகளின் யாழ். மாவட் [illegible]ச் செய்தியாளரான தேவகுமாரின் படு கொலை தொடர்பாக சர்வதேச ஊடக சுதந் திர அமைப்புகள் கடும் கண்டனம் வெளி யிட்டுள்ளன.

இப் படுகொலை தொடர்பாக உடனடி யாகப் பக்கச்சார்பற்ற விசாரணைகளுக்கு அழைப்பு விடுத்துள்ள இவ்வமைப்புகள், இத்தகைய படுகொலைகள் யாழ்ப்பாணத் தில் ஊடகவியலாளர்களுக்கு உள்ள ஆபத் தான சூழ்நிலையை வெளிப்படுத்துவன எனத் தெரிவித்துள்ளன.

இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலி களுக்கும் இடையில் 2006 ஆம் ஆண்டு மீண்டும் மோதல் ஆரம்பித்த பின்னர், யாழ். குடாநாட்டைப் பாதித்துள்ள தொடர்ச்சி [illegible]ான வன்முறைகளுக்கு இறுதியாகப் பலி [illegible]ான பத்திரிகையாளர் தேவகுமார் என எல் லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இப்படுகொலை தொடர்பாக சந்தேக நபர் எவரும் இதுவரை கைது செய்யப் படாத போதிலும், பாதுகாப்புப் படையினர் தமது முழுமையான இராணுவக் கட்டுப் பாட்டில் உள்ள ஒரு பகுதியில் இவ்வாறான தாக்குதல் எவ்வாறு இடம்பெற்றது என்ப தைத் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அந்த அமைப்புக் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்த விசாரணை களுக்காக அரசு மூன்று பொலிஸ் குழுக்களை ஈடுபடுத்தியுள்ளது. இக்கொலையின் சூத் திரதாரிகள் குறித்து ஊகங்களுக்கு இடம ளிக்க முடியாத சூழ்நிலையும் காணப்படு கின்றது. ஏனெனில் தேவகுமார் இரு தரப்பு செய்திகளையும் வெளியிட்டு வந்தவர் என எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப் புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேவகுமாரின் படு கொலையைக் கடுமையாகக் கண்டித்துள்ள சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம், 2006 இற்குப் பின்னர்யாழ்.குடாநாட்டில்படுகொலை செய்யப்பட்ட ஒன்பதாவது ஊடகப் பணி யாளர் இவர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் 2007 ஆம் ஆண்டு கடத்தப்பட் டுக் காணாமல்போன மூன்று பத்திரி கையாளர்கள் குறித்தும் அது கவலை வெளி யிட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் வன்முறை குறித்த அச்சமே பத்திரிகையாளர்கள் மத்தியிலும் அவர்களது குடும்பத்தவர்கள் மத்தியிலும் காணப்படும் அச்சம் தரும் யதார்த்தம் என சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பத்திரிகையாளர்கள் யாழ். குடாநாட்டில் கொலை செய்யப்பட்டமை, கடத்தப்பட் டமை, காணாமற் போனமை ஆகியன தொடர்பாக இதுவரை எவரும் நீதியின் முன் நிறுத்தப்படாததும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

பத்திரிகையாளர்களுக்கு எதிரான சகல வன்முறைகளையும் அவசரமாக - பக்கச் சார்பற்ற விதத்தில் - விசாரிப்பதற்கான அர சின் அரசியல் உறுதிப்பாடே பாதிக்கப்பட்ட வர்களின் குடும்பங்களுக்கு ஆறுதலாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (உ)

### போக்குவரத்து சபை போட்டிப்பரீட்சை

இலங்கை போக்குவரத்துச் சபையில் பட்டதாரிப் பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்வ தற்கான எழுத்து மூலமான போட்டிப்பரீட்சைக் கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறா தவர்களை பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் (வடக்கு) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பிரதான பிராந்திய முகாமை யாளர் க.கணேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி காலை8.30மணிதொடக்கம்யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர்களுக்கான அனுமதி அட்டைகள் கொழும்புத் தலைமை அலுவலகத்தால் அனுப்பப்பட்டுள்ளதாகவும் கிடைக்கப் பெறாதவர்களை பெற்றுக் கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203)

### பரிசளிப்பு விழா

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று காலை 9மணிக்கு கல்லூரி அதிபர் எஸ்.மாணிக்கவாசகர் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம் கலந்து கொள்வார். (01-11)

# ஐ.பி.எல்லின் 2ஆவது அரையிறுதியாட்டம் டோனி - யுவராஜ் அணிகள் இன்று மோதல்

மும்பை, மே 31

ஐ.பி.எல்லின் ருவென்ரி/20 தொடரின் 2ஆவது அரையிறுதியாட்டம் மும்பை வன்கடே ஸ்ரேடியத்தி இன்று இரவு 8 மணிக்கு நடக் கிறது. இதில் 'லீக்' முடிவில் 2ஆவது இடத் தைப் பிடித்த யுவராஜ்சிங் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, 3ஆவது இடத் தைப் பிடித்த டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடன் பலப் பரீட்சையில் ஈடுபடுகின்றது.

சென்னைஅணி8வெற்றிகள்,6தோல்விகளுடன் 16 புள்ளிகளையும், பஞ்சாப் அணி 10 வெற்றிகள், 4 தோல்விகளுடன் 20புள்ளிகளையும்பெற்றது.

சென்னை அணி 2 தடவைகள் பஞ்சாப்பை வென்றுள்ளமையால் நம்பிக்கையுடன் உள் ளது. ஆனால், சென்னை அணியை விட பஞ் சாப் அணி எல்லா வகையிலும் பலம் வாய்ந்தது. இதனால் இறுதிப் போட்டியில் நுழைய டோனி அணி கடுமையாக போராட வேண்டும்.

சென்னை அணியில் சுரேஷ் ரெய்னா, மோர்கீல், பார்தீவ் பட்டேல், அணித்தலை வர் டோனி ஆகிய முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். தொடக்க வீரரான பிள மிங் இன்றைய ஆட்டத்தில் விளையாட மாட்டார் என்பதால் பார்த்தீவ் பட்டேலுடன் வித்யூத் சிவராமகிருஷ்ணன் அல்லது கப்பு கெதரா தொடக்க வீரராக களம் இறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பந்துவீச்சில் கோனி, நிற்னி ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். முரளீதரனின் பந்து வீச்சு எதிர்பார்த்த அளவுக்கு இல்லை.

சென்னை அணியை விட பஞ்சாப் அணி துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்த டுப்பு என அனைத்து துறையிலும் சிறந்து விளங்குகிறது. தொடக்க வீரர்களை மார்ஷ், ஹோப்ஸ், அதிரடி துடுப்பாட்ட வீரர்கள் ஆவார்கள். இதில் ஓட்டங்கள் குவிப்பில் மார்ஷ் முதல் இடத்தில் உள்ளார். யுவராஜ் சிங், சங்ககாரா, ஜெயவர்த்தன போன்ற அதிரடித் துடுப்பாட்ட வீரர்களும் அந்த அணியில் உள்ளனர். பந்துவீச்சில் இர்பான் பதான், சிறிசாந்த், பியூஸ்சாவ்லா ஆகியோர்நல்ல நிலையில் உள்ளனர். இருஅணிகளும் இறுதிப் போட் டிக்கு தகுதி பெற கடுமையாகப் போராடும் என்பதால் ஆட்டம் பரபரப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஐஸ்லாந்தில் பூகம்பம் 20 பேர் காயம்!

ரிக்ஜவிக், மே 31

ஐஸ்லாந்தின் தலைநகரான ரிக்ஜவிக் கிலிருந்து 50 கிலோ மீற்றர் (30 மைல்) தொலைவில் அமைந்துள்ள தென் ஐஸ்லாந்தை வலு வான பூகம்பமொன்று நேற்றுமுன்தினம் உலுக்கியது. இப்பூகம்பம் செல்பொஸ் நகருக் கருகில் மையங் கொண்டிருந்தது. பூகம்ப அனர்த்தங்க ளால் இப்பகுதியில் கட்டடங்கள் சேதம டைந்தன. இருபதுக்கு மேற்பட்டோர் காயம டைந்தனர் என ஊட கத் தகவல்கள் தெரி வித்தன.

தலை நகரிலும் கட்டடங்கள் அதிர் வதை குடியிருப் பாளர்கள் உணர்ந் துள்ளார்கள். நாட் டின் தென் மேற்குப் பகுதியில் பின் அதிர்வுகளை மக்கள் உணர்ந்துள்ளார்கள். ரிக்ஜவிக்கும் செல்பொஸ்ஸுக் குமிடையிலான பாதை சேதமடைந் துள்ளது. இதனால் இப் பாதை மூடப்பட்டு விட்டது என தேசிய ஒலிபரப்பு நிலை யம் குறிப்பிட்டது.

பூகம்பத்தை அடுத்து தொடர் அதிர்வு கள் ஏற்படலாம் என்ற அச்சத்தில், அதிகாரி கள் பாதிக்கப் பட்ட பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்களை வீடுகளை விட்டு வெளியேறி இருக்குமாறு அறிவுறுத்தி யுள்ளார்கள். இப் பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.2 புள்ளிகளாகப் பதிவாகி யுள்ளது என அமெரிக்க பூகம்பவியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

"பூகம்பத்தின் உலுக்கல் எட்டு விநாடி கள் வரை நீடித்தது. ஒரே இரைச்சலாக இருந்தது. பூமிக்கடியிலிருந்து இடி முழங்கு வதைப் போலிருந்தது. சேதங்கள் ஏற்படா விட்டாலும் முழு வீடும் குலுங்கியது" என தலை நகரில் ஓராண்டு காலமாக வசித்து வரும் பிரிட்டிஷ்காரரான டானி ஒஸ்டின் பி.பி.சி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

"ஜன்னல் கண்ணாடிகள் அதிர்ந்தன. நாங் கள் எல்லொரும் பீதியடைந்தோம். பூகம்பம் மையங்கொண்டிருந்த சேல் பொஸ் பகுதியில், கண்ணாடிகள் நொறுங்கி விட்டன. மக்கள் வீதிகளில் நிற்கின்றார்கள். எல்லோரும் பயத்தில் உறைந்து போயிருக் கிறார்கள் என்ற தக வல்களும் வெளி யாகி யுள்ளன" என, தலை நகரில், அட்பி ஜோர்ஜ் ஒலாப்ஸ் டொட்டீர் என்னும் பெண் பொருளாதார நிபுணர் ரொய்ட்டர் செய்திச் சேவைக் குக் குறிப்பிட்டார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகராசா தங்கரத்தினம்



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா தங்கரத்தினம் நேற்று (30.05.2008) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகராசாவின் அன்பு மனைவியும் கமலாம்பிகை, பராசக்தி (கனடா), பொன்னம் பலம், சிதம்பரேஸ்வரி(ஜேர்மன்), சிதம்பர நாதன்(சுவிஸ்), அருளாணந்தன் (ஜேர்மன்), ஞானேஸ்வரி (ஆஸ்தி ரேலியா), Rev.அருட்பிரகாசம் (ஜீவ ஒளி மிஷன், கனடா), Rev. யோசுவா சிவகுமார்(ஜீவ ஒளி மிஷன், சுன்னாகம்) ஆகியோ ரின் பாசமிகு தாயாரும் குலசிங்கம், நகுலேஸ்வரன்(கனடா), சிறோஜினி, உதயகுமார்(ஜேர்மன்), பத்மினி(சுவிஸ்), ஈசா (ஜேர் மன்), அருளாளன்(ஆஸ்திரேலியா), கஜந்தி(கனடா), சாயிநந் தினி ஆகியோரின் அருமை மாமியாரும் நளாயினி(ஆசிரியர்), தர்ஷா, தர்ஷன்(கனடா), தனுஷாயினி, கிஷன், பவித்திரா, பிரியங்கா, தனுஷன், விநோதா, வினிதா (ஜேர்மன்), சபீனா, சந்தியா, சங்கீதா (சுவிஸ்), கஜன், சாருகா(ஜேர்மன்), திலானி, திலக்ஷன், நிவேதா (அஸ்திரேலியா), ஜோய் ஷெக்கீனா, ஷீபா, ஜெமீமா (கனடா), யூட் சைமன், யுதானி, யூலிய ஜோய் ஆகியோரின் பாசமிகு பேர்த் தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2008) சனிக்கிழமை பி.ப 2மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

### செல்வி செல்வமணி செல்லத்துரை

நாச்சிமார் கோயில் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாயை பிறப் பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி செல்வமணி செல்லத்துரை நேற்று (30.05.2008) வெள்ளிக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிரோன் மணி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சத்தியசீலன் மற்றும் பரமேஸ்வரி, கேசவராஜன் (முன்னாள் அதிபர், மானிப்பாய் இந் துக் கல்லூரி) ஆகியோரின் சகோதரியும், சியாமளா, சித்தபவன், ஜீவகன், சந்திரிக்கா (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி), சபேசன், பிரதாபன், திலீபன் ஆகியோரின் சித்தியும், சத்திய குமார், ஜெகத்குமார், வாசுகி, ஈஸ்வரகுமார், கௌரிக்குமார், சுக்ஷா ஜினி, வரப்பிரதன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2008) சனிக் கிழமை பி.ப 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டிவளவு,*
*நாச்சிமார் கோவில் வீதி,*
*நவாலி வடக்கு, மானிப்பாய்.*
*T.P.077 3946047*

*தகவல்:*
செல்வி சந்திரிக்கா கணேஸ்ப[illegible]
(ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்[illegible])


### தவறவிடப்பட்டுள்ளன

பொன்னம்பலம் முருகதாஸ் ஆகிய எனது மோட்டார் சைக்கிளின் (இலNPJG 2174) ஆவணங்கள், சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதி சான்றிதழ், வாகன வரிப் பத்திரம், இராணுவ அனுமதிப்பத்திரம் என்பன தெல்லிப் பழைக்கும், சுன்னாகத்திற்கும் இடையில் தவறவிடப்பட் டுள்ளன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

**நிக்கொற் போட்டோ, வீடியோ**
**K.V. விஜயன்,**
K.K.S. *றோட், துர்க்காபுரம், தெல்லிப்பழை.*



### சுகாதார முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை விசேட வகுப்புகள்

ஆரம்பம் - 31.05.2008 சனி
(சனி முதல் வெள்ளிவரை - 7நாள்கள்)

அச்சடித்த பாடக்குறிப்புகள்,
மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்படும்.

**திகழ் கல்வி நிறுவனம்,** K.K.S வீதி, இணுவில்.
சனி முதல் வெள்ளிவரை 09-12மணி

**[illegible]**, அஸ்பத்திரி பின் வீதி, மானிப்பாய்.
சனி முதல் வெள்ளி வரை 2.30-5.30Pm


### யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் சமூகத்திற்குச் சொந்தமான யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்தத் தாக்குதல்கள் மாணவர்களின் பாடத்திட்டம், கற்கை நெறி களில் எதிர்மறையான தாக்கத்தைச் செலுத்தியுள்ளன.

கடத்தப்பட்ட, சட்டவிரோதமாகத் தடுத்துவைக்கப்பட்ட, படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தொடர் பாக ஐ.நா.விசேட அறிக்கையாளர் அரசுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவனான அருணகிரிநாதன் நிருபராஜ் இராணுவ அதிகாரிகளால் 2007 இல் கடத்தப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள் சாத்வீக வழியிலான எதிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர். இவர் பின் னர் சித்திரவதைக்குள்ளான அறிகுறிகளுடன் விடுவிக்கப்பட்டார்.

இதேபோன்று கலைப்பீடத்தைச் சேர்ந்த மாணவர் மார்க்கண்டு சசிகுமார் கடத்தப்பட்டார்.

யாழ்ப்பாணத்திற்கு வெளியே செல்வதற்கான அனுமதியைப் பெறுவதற்காகப் புங்குடுதீவு கடற்படை முகாமுக்கு அவர் சென்றுவிட்டு முகாமிலிருந்து வெளியே வந்து பஸ்ஸிற்காகக் காத் திருந்தவேளை வாகனமொன்றில் வந்த இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டார்.

சசிகுமார் எங்கிருக்கின்றார் என்பது இதுவரைத் தெரியாதுள்ளது.

இதேபோன்று கலைப்பீடத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் கமல தாஸ் வரணிக்குத் தனியார் வகுப்பிற்காகச் சென்றுகொண்டிருந்த வேளை சுட்டுக்கொல்லப்பட்டார்.

வரணி இராணுவ முகாமிற்கு அருகில் அவரை வழிமறித்த இரா ணுவ அதிகாரிகள் அவரை வீடு திரும்புமாறு கேட்டுள்ளனர். அவர் வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளை இனந்தெரியாதவர்கள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதேபோன்று விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த சின்னையா சிவசங்கர் என்ற மாணவனும் சுட்டுக்கொல்லப்பட்டார். இக்கொலை தொடர்பாக எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கு அனுப்பிய கடிதத்திற்கு இதுவரை பதில் எதுவும் கிடைக்க வில்லை. - இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் நீதிமன்ற நீதிபதிகளாக தமிழர்கள் மூவர் நியமனம்



யாழ்ப்பாணம், மே31

மேல்நீதிமன்ற நீதிபதிகளாக யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, வவுனியாமாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் ஆகியோரை ஜனாதிபதி மகிந்தராஜ பக்ஷ மேல்நீதிமன்ற நீதிபதிகளாக நியமனம் செய்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதமநீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான நீதிச்சேவை ஆணைக்குழுவின் சிபார்சின் பேரில் நீதியமைச்சின் ஊடாக ஜனாதிபதி இந்த நியமனங்களை வழங்கியுள்ளார்.



திருகோணமலை நீதிபதி திருமதி சிவபாலன் சந்திரமணியும் மேல்நீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதியால் நியமிக்கப் பட்டுள்ளார். புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் இன்னும் ஓரிரு தினங்களில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவிகளை ஏற்றுக்கொள்வர். (அ-1)

## முகாமையாளர்கள் அமைப்பின் கூட்டம்

யாழ்ப்பாணம் ,மே 31

யாழ்ப்பாணம் முகாமையாளர்களின் கருத்தரங்கு அமைப்பின் விசேட கூட்டம், நல்லூரில் உள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

பொறியியலாளர் மு.தில்லைநாதன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், அமைப்பின் நகல்யாப்புக் குறித்து ஆராயப்படும்.

அமைப்பு மேற்கொண்டு முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் குறித்தும் இன்றைய கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படும். (அ)

## கொழும்பில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 7ஆம் திகதி வெள்ளவத்தையில் வைத்து கடத்தப்பட்ட கட்டட உதவி மேற்பார்வையாளரான செல்லத்துரை செல்வகுமார் வெள்ளை நிற 57-6320 மஸ்டா வானில் ஏற்றிச் செல்லப்பட்டார் என முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதேபோல மோதரையில் சலூன் உரிமையாளரான மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட குடும்பஸ்தரான குணரட்ணம் ஜெயராசா கடந்த 22ஆம் திகதி இரவு இராணுவ சீருடை அணிந்தவர்களால் வெள்ளைவானில் கடத்தப்பட்டிருந்தார்.

செல்லத்துரை செல்வகுமாரை நுகேகொடை சந்தியிலும், குணரட்ணம் ஜெயராசாவை கொட்டாஞ்சேனை சென்லூஸியாஸ் வீதியிலும் கடத்தியவர்கள் இறக்கிவிட்டுச் சென்றனர் எனத் தெரிவிக்கப் பட்டது.

கடத்தல் தொடர்பாக விவரங்களை அறிய முற்பட்ட போதும் இருவரும் தங்களது பாதுகாப்புக் கருதி எதையும் தெரிவிப்பதற்கு முடியாத நிலையிலுள்ளது என கண்ணீருடன் பிரதியமைச்சரிடம தெரிவித்தார் எனவும் கூறப்படுகிறது. (சி)

## தெஹிவளைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் வாழ்க்கைத் தொழில், தொழில் நுட்ப பயிற்சி பிரதியமைச்சர் பெ.இராதாகிருஷ்ணனிடம் முறைப்பாடு செய்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விவரத்தை அவரது ஊடகப்பிரிவின் தகவல் குறிப்பு வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

மஸ்கெலிய, மரே தோட்டத்தைச் சேர்ந்த சிவலிங்கம் புஸ்பராஜா, சொக்கன் சுபேந்திரன், சுப்பிரமணியம் மகேந்திரன், சிவலிங்கம் சசிதரன், ரெங்கன் கேதீஸ்வரன், சுந்தரராஜ் மோகன்ராஜ், ராமசாமி சொக்கன்ராஜ் ஆகிய ஏழு மலையக இளைஞர்களும், யாழ்ப்பாணம் நாவற்குழியைச் சேர்ந்த மேர்வின்சங்கர் தேவானந்தன் (வயது-21) என்ற இளைஞருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் தங்களை அடையாளப்படுத்தக் கூடிய ஆவணங்களோ பதிவுகளோ இல்லை என்று தெரிவித்த தெஹிவளை பொலிஸ் பொறுப்பதிகாரி ரஞ்சித் கொட்டாச்சி, தேசிய புலனாய்வுப் பிரிவின் அறிக்கை கிடைத்ததும் விடுவிக்கப்படுவார்கள் அல்லது விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

தெஹிவளை ரயில் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து இடம்பெற்ற தேடுதலை அடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.


### சாரதி தேவை

கொழும்பு நிறுவனம் ஒன்றுக்கு சாரதி ஒருவர் தேவை.

30 - 60 வயதுக்கு இடைப்பட்ட கொழும்புப் பாதைகள் பரிட்சயமாக உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கொழும்பில் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். சம்பளம் ரூபா 15 ஆயிரத்துக்கு மேல்.

*இருவரின் சிபார்சுடன் நேரில் வரவும்.*

ஆளணி முகாமையாளர்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவான் பெய் ஜென் போம் இதனை நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமேயில்லை. அரசியல்பட வேண்டும் என அமெரிக்கா மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகின்றது என்பதை அவர் நினைவூட்டினார்.

அமெரிக்கா சகல தரப்பினரையும் - ஆகக்குறைந்தது இலங்கை அரசையாவது - அரசியல் தீர்வைக் காணும் முயற்சியில் ஈடுபடுமாறு வலியுறுத்துகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
மீண்டும் ஒரு விலைக்கழிவு.....

2.0 GHz Intel Pentium Dual Core
ASUS Board (P5GC-MX-1333)
1GB DDR-II Kingston Ram
160 GB SATA HDD
15" View Sonic Monitor
ATX Cabinet
SONY DVD Writer
UPS (EAST)
PS/2 Key Board
Optical Mouse & Pad
Dust cover
3 வருட முழு உத்தரவாதத்துடன்... 54,000

3.0 GHz Intel Pentium
ASUS Board (P5GC-MX-1333)
1GB DDR-II Kingston Ram
80 GB SATA HDD
17" View Sonic Monitor
ATX Cabinet
SONY DVD Writer
UPS (EAST)
PS/2 Key Board
Optical Mouse & Pad
Dust cover
3 வருட முழு உத்தரவாதத்துடன்... 53,500

கணினியில் வைரஸ் தொல்லையா? மொனிற்றர் மற்றும் யு.பி.எஸ் பழுதடைந்துவிட்டதா? எதுவாயினும் எடுத்துவாருங்கள் நிவர்த்தி செய்து தருகின்றோம்.

JAFFNA: MARSHA SYSTEMS (PVT) LTD, # 74, Kannathiddy Junction, Jaffna. T.P:- 0212229418, 0777667108
NELLIADY: TEKNEL COMPUTERS & TECHNOLOGY, 364/384, Kodikamam Road, Nelliady. T.P:- 0777069934
CHAVAKACHCHERI: SCOT COMPUTER CENTRE, Katkuly 1st Lane, Post Office Road, Chavakachcheri. T.P:- 0776701394



CHEMISTRY
BASIC
புதிய அலகு ஆரம்பம்
31.05.2008 Sat 4.30pm
[Sat, Sun - 4.30 pm]
S.Vasu
NAVALAR
Jaffna.


## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் தீவிர எதிர்த்தாக்குதலை நடத்தினர். மீண்டும் பிற்பகல் 12.30 மணியளவில் படையினர் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் முன்நகர்வு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இம் முன்நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட தீவிர முறியடிப்புத் தாக்குதலையடுத்து மாலை 6.00 மணியளவில் பலத்த இழப்புக்களுடன் படையினர் பின்வாங்கியுள்ளனர்.

படையினரின் பெருமளவிலான படையப் பொருள்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் . இதற்கிடையில் மன்னார் பெரியமடுவுக்கு வடக்காகவும் தென்கிழக்காகவும் சிறிலங்காப் படையினர் மேற்கொண்டுள்ள தாக்குதலுக்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர தாக்குதலை நடத்தியவண்ணம் உள்ளதாகவும் அவர்கள் தரப்பில் நேற்றுமாலை தெரிவிக்கப்பட்டது.

## ஊடக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தகைய அத்துமீறலைக் கண்டித்து நேற்று மதியம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஐக்கிய தேசிய ஊடகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

நண்பகல் 12.30 மணியளவில் ஆரம்பமாகிய இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோன்சன் பெர்னாண்டோ மற்றும் கட்சியின் தவிசாளர் ருக்மன் சேனநாயக்கா ஆகிய எம்.பிக்கள் உட்பட நூற்றுக்கணக் கானோர் கலந்து கொண்டனர்.

'த நேஷன்' பத்திரிகையின் பிரதி ஆசிரியர் கீத் நொயர் மற்றும் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் பிரமுகர்கள் சனத் பாலசூரிய, பொட்டல ஜெயந்த ஆகியோருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் நாளை தங்களுக்கும் ஏற்படலாம் என்ற கருத்துச் சாரப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பிற்பகல் ஒரு மணிவரை இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர். (சி)

## சிவிலியன்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ள பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோல்ம்ஸ் இத்தகைய கொடூரங்களுக்குக் காரணமானவர்கள் நீதியின்முன் நிறுத்தப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இவ்வருடம் மாத்திரம் இருநூறிற்கும் மேற்பட்டவர்கள் இப்படிக் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள ஹோல்ம்ஸ், கடுமையாகக் கண்டிக்கப்படவேண்டிய இத்தகைய நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இவ்வாரம் இடம்பெற்ற தாக்குதல்களில் மாத்திரம் இருபதுக்கும் மேற்பட்ட சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர்; பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்துள்ளனர்.

இலங்கையில் மோதல் நடைபெறும் பகுதிகளிலும், பொதுமக்கள் அதிகமாக வாழும் நகரங்களிலும், பொதுமக்கள் கூடும் இடங்கள் மற்றும் அவர்கள் பிரயாணம் செய்யும் வாகனங்களை இலக்குவைத்துத் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன என்பது தெரிந்ததே. (உ)


### விற்பனைக்கு

ஹீரோ ஸ்ட்ரீம் 49 CC
லுமாலா சைக்கிள்

தனிப்பாவனையில் மிக நல்ல நிலையில் உள்ள ஹீரோ ஸ்ட்றீம் 49CC ரக மோட்டார் சைக்கிளும், பழையலுமாலா சைக்கிள் ஒன்றும் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு: இல. 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல. 222 3520



LAPTOPs
மலிவு விலையில்
HP COMPAQ
IBM LENOVA கணனிகள்
INTEL, CELERON, DUAL CORE, CORE 2 DUO, 512MB RAM, 80GB HARD DISK, WEBCAM, WIRELESS,
ஆசிரியர், வைத்தியர், விரிவுரையாளர், நிர்வாகி, NGO Workersக்கு மிகவும் பொருத்தமானது.
மூன்று வருட உத்தரவாதத்துடன்
POWER MAN SYSTEM
149, KASTHURIAR ROAD, JAFFNA. T.P: 2228147


## ஷெல்வீச்சில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவினரால் ஆறுபேருக்குமான 60 ஆயிரம் ரூபா உதவிக் கொடுப்பனவுப் பணமாக யாழ். பிரதேசசெயலரிடம் கையளிக்கப்பட்டது.

பிரதேச செயலர் அப்பணத்தை சம்பந்தப்பட்ட இரண்டு குடும்பங்களின் உரித்துடையவர்களிடம் பங்கிட்டுக் கையளித்தார்.

## பூநகரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் தகவல்கள் எவையும் வெளிவரவில்லை. (சி)

## வில்பத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடு ஒன்றில் இருந்த ஊர்காவல் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவரும் கணவனும் மனைவியுமே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் இருவரும் முதியவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பதற்றம் நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

வில்பத்து வனவிலங்கு சரணாலயப் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து மேற்படி சரணாலயம் மூடப்பட்டு அங்கு பலத்த தேடுதல்கள் நடைபெற்றதுடன் சந்தேகத்திற்கு இடமான எவரும் அப்பகுதியில் இல்லை என்று படைத்தரப்பு உறுதிப்படுத்திய பின்னரே மீண்டும் சரணாலயம் திறக்கப்பட்டது.

இந்நிலையிலேயே மூவர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது அங்கு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பணியில் ஊர்காவல் படையினரும் பொலிஸாரும் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் அவசியமென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான வளங்களை, இடைநிறுத்துவதும் 'ஜி.எஸ்.பி' போன்ற வர்த்தக சலுகைகளை நீக்கப் போவதாக மிரட்டுவதும் உதவியாக அமையா. அவை வறுமை, தீவிரப்போக்கு, மோசமான நிலை போன்றவற்றை அதிகரிப்பதாகவே அமையும் என அமைச்சர் ஜி.எல்.பீரீஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான பெரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஜனநாயக அரசுக்கு இவ்வாறான தடைகள், அழுத்தங்களுக்கு மத்தியில் அந்தப் போராட்டத்தில் வெற்றிபெறமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகக் குற்றவியல் விசாரணைகளை மேற்கொள்வதற்காக இலங்கை சட்ட மா அதிபர் திணைக்களம் சமீபத்தில் 60 குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளமையையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், துணை இராணுவக் குழுக்கள் சிறுவர்களைப் படையணிகளிடம் சேர்ப்பதை நிறுத்துவதற்காக இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும் அங்கு தெளிவுபடுத்தியுள்ள அமைச்சர், மேற்குலக நாடுகள் ஜி.எஸ்.பி வரிச் சலுகையை நிறுத்தினால் பல ஆயிரக்கணக்கான வறிய மக்களின் வேலைவாய்ப்பு பறிபோகப்போகின்றது என்றும் அங்கு தெரிவித்துள்ளார்.

இது அரசிற்கு எதிரான நடவடிக்கையாக அமையப் போவதில்லை. ஏனெனில், 60 முதல் 75 வீதமான ஆடைத் தொழிற்சாலைகள் கிராமப் பகுதிகளிலேயே அமைந்துள்ளன. (சி)


### புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses... Full Time Classes
*Computerized Accounting (Tally, Accpack, MYOB, QuickPro) **INDIVIDUAL Classes
** MS Office **DTP *V.B., .net
* Hardware ** Internet & Email
* Video Editing *AutoCAD *ICT *GIT
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
*Sun Certified Java Programmer.
Degree Course * BIT Semester 1,2,4 & 6
பதிவுகள் 01.06.2008 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.05.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org